ஆரம்பக்கல்வி

ELEMENTARY EDUCATION



NOVEMBER—1955

AUG 1956
15 NOV 1955
MADRAS

எய்டெட் ஆரம்பப் பள்ளி மானேஜர்கள்
2-வது மாநாட்டுத் தலைவர்
டாக்டர் P. வரதராசலு நாயுடு, M.D

ஆரம்பக்கல்வி ஆபீஸ்
94-95, புது தெரு
மண்ணடி, சென்னை-1

ASSOCIATION PUBLISHING HOUSE

" ARAMBA KALVI OFFICE "

94-95, New Street, Mannady P. O. Madras-1.

POST BOX NO. 1818

" ஆரம்பக்கல்வி " இனம்

ஒன்று முதல் ஐந்தாம் வகுப்பு வரையில், எமது "புதுமுறை சங்க வாசகங்களை" அல்லது "வீரபாண்டியன் தமிழ் வாசகங்களை" பாட புத்தகங்களாக, அல்லது ரூ. 50—க்குக் குறையாமல் இதர பாட புத்தகங்களுக்கு ஆர்டர் கொடுத்து ஆதரிக்கும் எய்டெட், பஞ்சாயத்து, லேபர் ஆரம்பப் பாடசாலைகளுக்கு, " ஆரம்பக்கல்வி " மாதப் பத்திரிகையை இனமாக மாதாமாதம் அனுப்பிவைக்கப்படும். மாதிரிப் பிரதிகள் வேண்டுபவர்கள் கீழ்க் குறித்துள்ள தொகைக்குத் தபால் ஸ்டாம்புகளை (Postal Stamps) வாங்கிக் கவரில் வைத்து அல்லது மாதிரிப் பிரதிகளுக்கு அனுப்பவேண்டிய தொகை ஒரு ரூபாய்க்கு மேற்பட்டிருந்தால் அந்தத் தொகையை M. O. மூலம் அனுப்பவும்.

புதுமுறை சங்க வாசகங்கள்

	புத்தகத்தின் விலை			கெஜட் பக்கம்	அங்கீகாரமான தேதி
முதல் வகுப்பு	0	4	0	8	4–5–'55
இரண்டாம் வகுப்பு	0	5	0	22	19–5–'54
மூன்றாம் வகுப்பு	0	7	0	23	19–5–'54
நான்காம் வகுப்பு	0	8	0	23	19–5–'54
ஐந்தாம் வகுப்பு	0	9	0	23	19–5–'54

இந்த ஐந்து புத்தகங்கள் மட்டும் மாதிரிப் பிரதிகளாக வேண்டுவோர் ரூ. 1–0–0 அனுப்பவும்.

ஆசிரியர் : பி. வீரராகவன்

வருட சந்தா ரூ. 3.] [தனிப் பிரதி 4 அணா.

மலர் 16 | நவம்பர் 1955 | இதழ் 11

சென்னை மாநில எயிடட் ஆரம்பப் பள்ளி மானேஜர்கள், ஆசிரிய மானேஜர்கள் இரண்டாவது மாநாடு

வடார்க்காடு வேலூர்

இலட்சுமணசாமி முதலியார் டவுன் ஹாலில்

டாக்டர் வரதராசலு நாயுடு அவர்களின் தலைமையின் கீழ்

19-11-55

சனிக்கிழமை காலை 10-30 மணிக்குச்

சிறப்பாக நடைபெறும்

★

நெருக்கடியான நேரம்! மிக முக்கியமான மாநாடு!

மானேஜர்களே!

திரள் திரளாக வாருங்கள்! தவறாமல் வாருங்கள்!

அப்போதே சொன்னோம்!
அப்படியே ஆயிற்று!!

டாக்டர் அழகப்ப செட்டியாரின் தலைமையில் அமைக்கப்பட்ட ஆரம்பக் கல்வி சீரமைப்புக் குழுவின் அறிக்கை அண்மையில் வெளி வந்திருக்கிறது.

இந்தக் குழு அமைக்கப்பட்டவுடனே இந்தக் குழுவால் உரு வான பயன் எதுவும் விளையாது என்று நாம் திட்டவட்டமாகத் தெரிவித்திருந்தோம்.

ஆரம்பக் கல்வியைப்பற்றி ஆராய்ச்சி செய்யவேண்டிய ஒரு குழுவிலே அந்தத் துறையில் நீண்ட காலமாக ஈடுபட்டு அனுபவம் பெற்றவர்களல்லவா இடம் பெறவேண்டும்—ஆனால் அத்தகைய திறமையோ தகுதியோ படைத்தவர்கள் ஒருவர்கூட இந்தக் குழு வில் இடம் பெறவில்லையே, இந்தக் குழுவால் எப்படி நியாயம் கிடைக்கும் என்னும் கேள்வியைத் தெள்ளத் தெளிவாக எழுப்பி யிருந்தோம்.

டாக்டர் அழகப்பா உயர்ந்த உள்ளமும் சிறந்த நோக்கமும் படைத்தவர்தான். நாட்டின் முன்னேற்றத்தில் நல்லதோர் அக் கறையும் கல்வியின் வளர்ச்சியில் தலையாய பற்றும் வாய்ந்தவர்தான். பற்பல கல்லூரிகளைத் தன் கைப்பணத்தைக் கொண்டு உருவாக்கிப் போற்றி உயர்தரமாக வளர்ப்பவர்தான். அத்தனையும் உண்மை. ஆனால் ஆரம்பக் கல்விக்கும் அவருக்கும் என்ன தொடர்பு என்று கேட்டிருந்தோம்.

திருவாளர் சுந்தர வடிவேலு, ஆரம்ப ஆசிரியர்களிடம் அன்பும் பற்றும் உடையவராய் இருக்கலாம். ஆனால் அவர் கல்வி அதிகாரி யாக இருக்கும் வரையிலே, அவர் அரசாங்கத்தின் சார்பிலேதான் பேச முடியும்? எந்தப் பிரச்சினையையும் அரசாங்கத்தின் வசதியை யும் பொருள் நிலையையும் முன் வைத்துத்தானே அவர் அணுக முடியும்? அவர் இருக்குமிடம் அப்படிப்பட்டதாயிற்றே! அப்படிப் பட்ட ஒருவரை செயலாளராகக் கொண்ட குழு எப்படி ஆரம்பக் கல்விப் பிரச்சினையை அரசாங்கப் பற்றற்ற முறையில் நடுநிலை நின்று ஆராய முடியும் என்றும் நாம் வினவியிருந்தோம்.

குழுவின் மற்ற உறுப்பினர்கள் அனைவரும் உயர்நிலைப் பள்ளிகளைச் சேர்ந்தவர்களே தவிர ஆரம்பப் பள்ளிகளைச் சேர்ந்தவர்களல்ல என்பதையும் நாம் விளக்கியிருந்தோம்.

ஆரம்பக் கல்வியைத் திருத்தியமைக்க ஒரு குழு அமைகிறது—அந்தக் குழுவில் ஆரம்பக் கல்வியுடன் தொடர்புடையவர்கள் ஒருவர் கூட இல்லையே—இது என்ன நியாயம்—திருமணம் நடக்கிறது, ஆனால் அதில் மணமகன் இல்லையே—இது என்ன விபரீதம் என்றெல்லாம் நாம் எழுதியிருந்தோம்.

நிறுவப்படுவதோ ஆரம்பக் கல்விச் சீரமைப்புக் குழு. ஆனால் அதில் இருப்பவர்களோ ஆரம்பக் கல்வியோடு தொடர்பே இல்லாதவர்கள். இப்படிப்பட்ட ஒரு குழுவால் பிரச்சினையைத் தீர்க்கவே முடியாது என்று நாம் அழுத்தந் திருத்தமாகத் தெரிவித்திருந்தோம்.

நாம் அப்போது அப்படிச் சொன்னதெல்லாம் எவ்வளவு உண்மை என்பதை, இப்போது வெளிவந்திருக்கிற குழுவின் அறிக்கை தெள்ளத் தெளிவாக விளக்கிவிட்டது.

இந்தக் குழுவினரிடம் எந்தப் பணி அரசாங்கத்தால் ஒப்படைக்கப்பட்டதோ அந்தப் பணியைத் துளியளவுகூட இந்தக் குழு நிறைவேற்றவில்லை.

இந்திய அரசியல் திட்டம் அமுலுக்கு வந்த பத்தாண்டுக் காலத்திற்குள் 6 முதல் 11 வயது வரையுள்ள எல்லாப் பிள்ளைகளுக்கும் கட்டாய இலவச ஆரம்பக் கல்வியை அளிக்க வேண்டுமென்று அதே அரசியல் திட்டத்தில் தெரிவிக்கப்பட்டிருக்கிறதே, இந்த நோக்கத்தை எப்படி நிறைவேற்றுவது? இந்தக் கேள்விக்கான ஒரு விடையைத் தயாரிப்பதற்காகத்தான் இந்தக் குழு நிறுவப்பட்டது.

கிடைத்திருக்கிறதா விடை? தந்திருக்கிறதா குழு?

இல்லவே இல்லை.

ஆரம்பக் கல்வியை விரைவில் பரப்புவதற்கான உருப்படியான திட்டம் ஒன்றைக்கூட இந்தக் குழு அளிக்கவில்லை.

6 முதல் 11 வயது வரையுள்ள 63 லட்சம் பிள்ளைகளில், 32 லட்சம் பிள்ளைகள் மட்டும்தான் இப்போது, இந்த மாநிலத்தில், பள்ளிக்கூடம் போகிறார்கள்.

மிச்சமுள்ள 31 லட்சம் பிள்ளைகள் பள்ளிக்கூடம் போவதில்லை. அவர்கள் அப்படிப் போகாததற்கான அடிப்படைக் காரணம், அவர்

களுடைய வட்டாரத்தில் பள்ளிக்கூடம் இல்லை என்பது அல்ல. அவர்களுடைய பெற்றோர்களின் வறுமைதான் உண்மைக் காரணம்.

ஆரம்பப் பள்ளிகளிற் பயிலும் ஏழைப் பிள்ளைகள் அத்தனைப் பேருக்கும் பகல் உணவு இலவசமாகப் போடப்படவேண்டும். பலகை பென்சில் புத்தகம் குறிப்புச் சுவடிகள் முதலியன இலவசமாக வழங்கப்படவேண்டும். சட்டை துணிகளும் இலவசமாக அளிக்கப்படவேண்டும். இந்த ஏற்பாடுகளையெல்லாம் அரசாங்கமே முன்வந்து, அதனுடைய செலவிலேயே செய்தாலொழிய, ஒவ்வோர் ஊரிலும் ஒரு பள்ளிக்கூடம் அல்ல, ஒன்பது பள்ளிக்கூடங்களைத் திறந்து வைத்தாலும், இந்த 31 லட்சம் பிள்ளைகளும் பள்ளிக்கூடம் சேரமாட்டார்கள். இது உறுதியினும் உறுதியாகும்.

தெரிவித்திருக்கிறதா குழு இந்த வகையாக?

இல்லை.

எந்தெந்த ஊரிலே, ஊர் மக்களே முன்வந்து, பிள்ளைகளின் பகல் உணவிற்கான செலவில் பாதியைத் தாங்களே ஏற்றுக்கொள்கிறார்களோ, அந்தந்த ஊர்களில் மட்டும் இலவசப் பகல் உணவுத் திட்டத்தைத் தொடங்கவேண்டும் என்று குழு தெரிவித்திருக்கிறது.

கொக்கின் தலையில் வெண்ணெயை வை—அது உருகும்—உருகினால், கொக்கின் கண்கள் மறையும்—அப்போது கொக்கு ஓட முடியாது—அதனை எளிதில் நாம் பிடித்துவிடலாம் என்றானாமே ஒரு தெளிவற்ற சிறுவன், அந்தக் கதையாக அல்லவா இருக்கிறது இந்த அற்புத ஆலோசனை!

ஊர் மக்களிடம் பணமில்லை என்பதால்தானே, அவர்கள், தங்கள் பிள்ளைகளைப் பள்ளிக்கூடம் அனுப்ப முடியாமல் தவிக்கிறார்கள்! அந்தக் காரணத்தால்தானே, நாம், அவர்களுடைய பிள்ளைகளுக்கு இலவசப் பகல் உணவு போடவேண்டும் என்று தெரிவிக்கிறோம்! நிலைமை இப்படியிருக்கும்போது, அந்தப் பெற்றோர்களிடமே பணத்தை வாங்கி, அவர்களுடைய பிள்ளைகளுக்குப் பகல் உணவு கொடுப்பது என்றால், அதன் பெயர் இலவச உணவா? பண உதவி கொடுக்கிற நிலை இருக்குமானால், அந்தப் பெற்றோர்கள், தங்கள் பிள்ளைகளுக்குத் தாங்களே உணவு போடாமல் அரசாங்கத்தை ஏன் எதிர்பார்க்கிறார்கள்? வறுமை எங்களை வாட்டுகிறது—பணமில்லை எங்களிடம்—எனவே பிள்ளைகளைப் படிக்க வைக்க முடியவில்லை என்று அவர்கள் சொல்கிறார்கள். "ஆகா அப்படியா சேதி! கொண்டுவாருங்கள் பணத்தை! நாங்கள் ஏற்பாடு செய்

கிறோம் அப்பிள்ளைகளின் பகல் உணவிற்கு!" என்று இந்தக் குழு தெரிவிக்கிறது.

சரிதானா இந்த விடை? சரியா என்பதுகூட இருக்கட்டும் ஒரு புறம். அறிவுடைமைதானா இப்படிக் கூறுவது?

எல்லாப் பிள்ளைகளையும் பள்ளிகளில் சேர்ப்பதற்கான வழி வகைகளை இந்தக் குழு வகுத்திருக்கவேண்டும். ஆனால் வகுக்க வில்லை. வகுக்காதது மட்டுமல்ல, சங்கடம் சிக்கல் எதுவுமின்றி ஒழுங்காக நடந்து வருகிற துறைகளில் புகுந்து, அளவற்ற குழப் பத்திற்கும் சிக்கலுக்கும் விதை தூவியிருக்கிறது குழு.

தீர்க்கவேண்டிய பிரச்சினையைத் தீர்க்காதது மட்டுமல்ல, இல் லாத புதுப் பிரச்சினைகளை உண்டாக்கியிருக்கிறார்கள்.

தனிப்பட்டவர்களின் நிர்வாகத்தில் உள்ள ஒவ்வோர் பள்ளிக் கூடத்திற்கும், பதிவு செய்யப்பட்ட ஒவ்வோர் நிர்வாகக் குழு (Managing Committee) ஏற்படுத்தவேண்டுமாம். இந்தக் குழு வில், அரசாங்கம், ஒன்று அல்லது இரண்டு பிரதிநிதிகளை நியமிக்க வேண்டுமாம். எத்தனை விரைவில் முடியுமோ அத்தனை விரைவில் இத்தகு குழுக்களை அமைத்துவிடவேண்டுமாம். இந்தக் குழுக்கள் அமைந்தது முதல், பள்ளிக்கூடங்களின் நிர்வாகம், இந்தக் குழுக் களிடம்தான் இருக்கவேண்டுமே தவிர தனிப்பட்டவர்களிடம் இருக்கக்கூடாதாம்.

அழகப்பா குழுவினர் தெரிவித்துள்ள அதிஅற்புதமான யோசனைகளில் இது ஒன்று!

இப்படி ஒரு நிர்வாகக் குழு இல்லாததால் இதுவரை ஏற்பட்ட கஷ்டம் என்ன? இப்படி ஒரு குழு இனி ஏற்பட்டுவிட்டால் அத னால் ஏற்படக்கூடிய இலாபம் என்ன?

தனிப்பட்ட நிர்வாகத்தின் கீழ் உள்ள பள்ளிகள் மிகச் சிறந்த முறையில் நடந்து வருகின்றன. இதனைக் கல்வித் துறையில் அனுபவம் படைத்த அத்தனைப் பேரும் ஒப்புக்கொண்டிருக்கிறார் கள். நிலைமை இப்படி இருப்பதால்தான், நகரசபையினரால் நடத் தப்படும் பள்ளிகளில் கல்வி இலவசம் என்றாலும்கூட, தங்கள் பிள்ளைகளை அந்தப் பள்ளிகளுக்கு அனுப்பாமல், தனிப்பட்ட பள்ளி களில் சம்பளம் உண்டு என்றாலும்கூட, தங்கள் பிள்ளைகளை அந்தப் பள்ளிகளுக்குத்தான் அனுப்பி வருகிறார்கள் எண்ணற்ற பெற் றோர்கள்.

"முனிசிபாலிடி பள்ளிக்கூடம் இருக்கிறதே பக்கத்தில்! அங்கே அனுப்புவதுதானே உங்கள் பையனை!"

"சேச்சே! அங்கே கல்வியின் தரம் குறைவு சார்! தனிப்பட்ட பள்ளி தொலைவில்தான் இருக்கிறது. சம்பளமும் வாங்குகிறார்கள். இருந்தாலும் பரவாயில்லை. நன்றாகச் சொல்லித் தருகிறார்கள்!"

இப்படிப்பட்ட உரையாடல்கள் ஏராளம் நம் மாநிலத்தில்.

தனிப்பட்ட பள்ளிகள், தனிப்பட்டவர்களின் நிர்வாகத்தில் இத்தனைச் சிறப்பாக நடந்துகொண்டிருக்கும்போது, அவற்றிற்கு நிர்வாகக் கமிட்டி என்று ஒன்றை ஏற்படுத்தி, குழப்பத்தை ஏன் உருவாக்கவேண்டும்?

நிர்வாகக் கமிட்டி என்று ஒன்று அமைத்தால் அந்தக் கமிட்டி உறுப்பினர்களுக்கும் பள்ளிக்கூட நிர்வாகிகளுக்குமிடையே பூசலும் பிணக்கும் வளர்வது நிச்சயம். பகையும் போரும் செழிப்பது உறுதி. அதிலும் அரசாங்கத்தால் நியமிக்கப்படுகிற உறுப்பினர்கள், ஆளும் கட்சியைச் சேர்ந்தவர்களாகத்தான் பெரும்பாலும் இருப்பார்கள். ஏனைய உறுப்பினர்கள் அத்தனைப் பேரும் ஆளும் கட்சியைச் சேர்ந்தவர்களாகவே இருப்பார்கள் என்று சொல்ல முடியாது. அரசாங்க உறுப்பினர்கள் ஒரு கட்சியினராகவும், ஏனைய உறுப்பினர்கள் வேறு கட்சியினராகவும் இருந்துவிட்டால்—அப்படித்தான் பெரும்பாலும் இருக்கும்—நிர்வாகக் கமிட்டிக் கூட்டங்களில் கட்சிப் பூசல்களும் அரசியல் சண்டைகளும்தான் காட்சி தருமே தவிர பள்ளிக்கூடத்தின் செழிப்பும் சிறப்பும் சிறிதளவும் இடம் பெற முடியாது. இப்படிப்பட்ட நிலையில், ஓர் ஆசிரியரை நியமிப்பது என்றால், அவர் எந்தக் கட்சி என்பதைப் பார்த்து நியமிக்கிற நிலை தான் ஏற்படுமே தவிர, அவருடைய திறமையை முன்வைத்து வேலைக்கு வைக்கிற நிலை வளராது.

அதுமட்டுமல்ல. நிர்வாகக் கமிட்டி என்று ஒன்று ஏற்பட்டு விட்டால், பள்ளிக்கூட நிர்வாகிக்கும், பள்ளிக்கூடத்திற்கும் இப்போது இருப்பதைப் போன்ற நெருக்கமான தொடர்பு அப்போது இருக்க முடியாது.

மற்றோர் பிரச்சினை. புதிதாக அமைகிற நிர்வாகக் கமிட்டியில், இப்போதைய நிர்வாகியின் நிலை என்ன? அவர் தொடர்ந்து இருப்பாரா? இருந்தால், எந்த நிலையில்—எத்தகைய அதிகாரத்தோடு? நிர்வாகிக்கும் அதிகாரமிருக்கும்; நிர்வாகக் கமிட்டிக்கும் அதிகாரமிருக்கும் என்றால்; எந்தெந்த அதிகாரம் யார் யாரிடம் இருக்கும்?

இந்த இருவகை நிர்வாகங்களின் விளைவாக ஏற்படும் குழப்பத்தை எப்படித் தீர்ப்பது? நிர்வாகிக்கு என்று எந்தவித அதிகாரமும் இருக்காது என்றால், அவர் அரும்பாடு பட்டு இருபது முப்பது ஆண்டுகளாகப் போற்றி வளர்த்த பள்ளிக்கூடத்தை—அதனுடைய மேஜை, நாற்காலி சாமான்களை—அதனுடைய சிறந்த அமைப்பை நல்ல பெயரை—இத்தனையையும் பணம் கொடுத்து வாங்கப் போகிறதா புதிய கமிட்டி? ஆமாம் என்றால் அதற்குத் தேவையான அளவு பணம் அதனிடம் ஏது?

இத்தனைக் குழப்பங்களையும் ஏற்படுத்துகிறது நிர்வாகக் குழு என்னும் ஏற்பாடு. குழப்பங்கள் அத்தனையையும் ஒரு வகையாகத் தீர்த்து வைத்து, நிர்வாகக் குழுவை அமைக்கிறோம் என்றாலும், அதனால் என்ன பயன் விளைய முடியும்? தனிப்பட்ட மனிதரின் நிர்வாகத்தில் இருப்பதைவிட கமிட்டி ஒன்றின் நிர்வாகத்தில் இருந்தால், பள்ளிக்கூடத்தின் தரம் உயரும் என்பதற்கு ஆதாரம் எங்கே? தரம் உயராது, தாழ்ந்துதான் போகும் என்பதற்கு ஆதாரம் இருக்கிறது—முனிசிபல் பள்ளிக்கூடங்கள்!!

தனிப்பட்டோர் பள்ளிகளை விட, நகர சபைகளால் நடத்தப்படுகிற பள்ளிகளிலேயே தரம் குறைவாக இருக்கிறது என்றால், நிர்வாகக் கமிட்டிகளால் நடத்தப்படுகிற பள்ளிகளில் மட்டும் தரம் உயர்ந்துவிடும் என்று எப்படிச் சொல்ல முடியும்?

எந்தக் கண்ணோட்டத்திலிருந்து கவனித்தாலும் சரி, "தனிப்பட்ட பள்ளிகளுக்கு நிர்வாகக் கமிட்டி" என்கிற ஏற்பாடு, கவைக்குதவாதது என்பது தெள்ளத் தெளிவாக விளங்குகிறது.

* * *

"எந்த ஆரம்பப் பள்ளியிலும் எந்த மாணவனிடமிருந்தும், ஓராண்டுக் காலத்திற்குப் பிறகு சம்பளம் வாங்கக் கூடாது என்று எல்லா ஆரம்பப் பள்ளிகளுக்கும் அரசாங்கம் 'நோட்டீஸ்' கொடுத்து விட வேண்டும்.

அதன்படியே, ஓராண்டுக் காலம் முடிந்ததும், எந்தப் பள்ளிக்கூடமும் பிள்ளைகளிடமிருந்து சம்பளம் வசூலிக்கக் கூடாது.

பள்ளிக்கூட நிர்வாகிகளுக்கு அரசாங்கம் நஷ்டஈடு தரவேண்டிய அவசியமுமில்லை."

டாக்டர் அழகப்பா குழுவினர், அரும்பாடு பட்டுக் கண்டுபிடித்திருக்கிற பற்றோர் அற்புதமான யோசனை, இது!

சம்பளமும் வாங்காதே—நஷ்ட ஈடும் கிடையாது என்று சொல்லி விட்டால் பள்ளிக்கூடம் எப்படி நடக்கும்?

ஆசிரியர்களின் ஊதியத்தைப் பொறுத்த அளவில், பணம், அரசாங்கத்தால் தரப்பட்டு விடுகிறது என்பது உண்மைதான்.

ஆனால் ஏனைய செலவுகளுக்கெல்லாம் பணம்?

ஆசிரியர்களுக்கு நிர்வாகிகளால் தரப்பட வேண்டிய அதிகப்படி ஊதியம்,

வேலைக்காரிகள்—ஆயாக்கள்—தோட்டிகளுக்குச் சம்பளம்,

கைத்தொழிற் பயிற்சிக்குத் தேவையான பண்டங்கள் வாங்குவது,

ஆசிரியர்களின் பிராவிடண்ட் நிதிக்கு நிர்வாகிகள் செலுத்த வேண்டிய தொகை,

பள்ளிக்கூடக் கட்டிடத்திற்கு வாடகை,

கல்விப் பயிற்சிக்குத் தேவையான பண்டங்கள் கருவிகள் மேசை நாற்காலிகள் வாங்குவது,

வீட்டைப் பழுது பார்ப்பது, சுண்ணாம்படிப்பது போன்ற பணிகள்,

இத்தனைச் செலவுகளுக்கும் பணம் வேண்டுமே அதற்கு எங்கே போவது?

சில பள்ளிக்கூடங்களுக்கு நிர்வாகக் கிராண்ட் என்பதாக ஒரு சிறு தொகை அரசாங்கத்தால் தரப்படுகிறது என்பது உண்மைதான்.

ஆனால் எல்லாப் பள்ளிக்கூடங்களுக்கும் அந்த 'கிராண்ட்' தரப்படுவதில்லை.

தரப்படுகிற பள்ளிகளிலும், எல்லாச் செலவுகளையும் அந்தச் சிறிய அளவு பண உதவியைக் கொண்டே முடித்து விடுவதென்பது சிறிதும் இயலாத செயல்.

எனவேதான், பிள்ளைகளிடமிருந்து சம்பளம் வசூலிக்கப்படுகிறது. அந்த வசூலைக் கொண்டுதான் இந்தச் செலவுகளையெல்லாம் சரிக்கட்ட வேண்டியிருக்கிறது.

பிள்ளைகளிடமிருந்து சம்பளம் வாங்கக் கூடாது என்பது அரசாங்கத்தின் கருத்தாக இருந்தால், அப்படி வாங்காததால் ஏற்படும் நஷ்டத்தை அரசாங்கம் ஈடுகட்டித் தருவதுதான் நியாயம்.

சம்பளமும் வாங்காதே—நஷ்ட ஈடும் கிடையாது என்று கூறுவது, உணவே போடமாட்டேன், ஆனால் பிள்ளை மட்டும் வளர்ந்தாக வேண்டும் என்று பேசிடுவது போன்ற பேதைமையே தவிர வேறில்லை.

பள்ளிக்கூடம் நடந்தாக வேண்டும் என்றால் சம்பளம் வாங்கியாக வேண்டும். சம்பளம் வாங்கக் கூடாது என்றால் நஷ்டஈடு கொடுத்தாக வேண்டும்.

இதுதான் முறை; ஒழுங்கு; நியாயம்; நேர்வழி.

இந்த முறைப்படி நடந்தால்தான் பள்ளிக்கூடங்களை நடத்த முடியும்.

ஆனால், "இந்த மாநிலத்தில் மொத்தமுள்ள உதவி பெறும் பள்ளிகள் 10,178-ல் ஏறத்தாழ 1000 பள்ளிகள் மட்டும் தானே பிள்ளைகளிடமிருந்து சம்பளம் வாங்குகின்றன ! மிச்சமுள்ள 9000 பள்ளிகளும் சம்பளம் வாங்குவதில்லையே! அவைகள் மட்டும் எப்படி நடக்கமுடிகிறது ?" என்று சிலர் வினவுகின்றனர்.

கேள்வி நியாயமானதுதான். ஆனால் சம்பளம் வாங்காத 9000 பள்ளிகளும் பெரும்பாலும் கிராமப் பகுதிகளில் இருப்பவை என்பதையும், சம்பளம் வாங்குகிற 1000 பள்ளிகளும் பெரும்பாலும் நகரப் பகுதிகளில் இருப்பவை என்பதையும், கேள்வி கேட்பவர்கள் மறந்து விடுகிறார்கள்.

நகரப் பகுதிகளில், மாதம் 60 ரூபாய் முதல் 150 ரூபாய் வரை பள்ளிக்கூடக் கட்டிடங்களுக்கு வாடகை தரவேண்டியிருக்கிறது. இந்தச் செலவு கிராமப் பகுதிகளில் கிடையாது. மாதம் 5 ரூபாய் கொடுத்தால் போதும். கிராமங்களில் கட்டிடம் கிடைத்து விடும். அந்தச் செலவுகூட இல்லாமல், சத்திரம், சாவடி, புறம்போக்கு நிலங்களில் கொட்டகை அமைப்பது போன்ற முறைகளில் பள்ளிக்கூடத்தை நடத்துவதும் கிராமங்களில் இயலக்கூடிய செயலே. ஆனால் நகரங்களில், இப்படிப்பட்ட இடங்கள் கிடைப்பதும் அரிது. கிடைத்தாலும், நகரப் பிள்ளைகள் இப்படிப்பட்ட இடங்களில் அமைந்துள்ள பள்ளிகளுக்கு வரமாட்டார்கள்.

நகரப் பகுதிகளில் உள்ள பள்ளிகள், ஆயாக்கள்—தோட்டிகள்—வேலைக்காரிகள்—ஆகியவர்களை நியமிக்க வேண்டியிருக்கிறது. இந்தச்

செலவே மாதம் சுமார் 30 ரூபாய் ஆகிவிடுகிறது. கிராமப் பகுதிகளில், குழந்தைகளை அழைத்துவரும் ஆயாக்கள் அவசியமில்லை. வேலைக்காரிகளும் தோட்டிகளும் மிக மிகக் குறைந்த சம்பளத்திற்கு வருவார்கள்.

கிராமப் பகுதிகளில் பண நடமாட்டம் மிகக் குறைவு. எனவே சம்பளம் வசூலிக்க முடியாது. ஆனால் அரிசி, பருப்பு, விறகு, நெய், பால், தயிர் முதலிய பண்டங்கள் எளிதில் கிடைக்கும். கிராமப் பகுதிகளில், பள்ளிக்கூட நிர்வாகிகள், வெளிப்படையாகவோ மறைமுகமாகவோ, அவர்களாகக் கேட்டோ அல்லது பெற்றோர்களாகக் கொடுத்தோ, எப்படியோ ஒன்று, இப்படிப்பட்ட பண்டங்களைப் பெற்று வருகின்றனர்.

கிராமப் பகுதிகளில், பள்ளிக்கூட நிர்வாகிக்கு உள்ள வாழ்க்கைச் செலவு குறைவு. ஆனால் நகரப் பகுதிகளிலோ வாழ்க்கைச் செலவு அதிகம். அதிலும் சென்னையைப் போன்ற பெரிய நகரங்களில், வீட்டு வாடகையும் ஏனைய செலவுகளும் பொறுக்க முடியாத அளவுக்கு அதிகம் என்பது எவரும் அறிந்த உண்மை.

இத்தனைக் காரணங்களையும் ஒரு சேர எண்ணிப் பார்த்தால் தான், நகரப் பள்ளிகளில் ஏன் சம்பளம் வசூலிக்கப்படுகிறது என்பதும், கிராமப் பகுதிகளில் ஏன் வசூலிக்கப்படவில்லை என்பதும் தெளிவாக விளங்கும். நிர்வாகக் 'கிராண்ட்' பெரும்பாலும் கிராமப் பள்ளிகளுக்குத்தான் தரப்படுகிறது என்பதையும், நகரப் பள்ளிகளுக்குத் தரப்படுவதில்லை என்பதையும் இச்சமயத்தில் நினைவுபடுத்திக் கொண்டால், நகரப் பள்ளிகள் சம்பளம் வசூலிப்பதின் நியாயம் நன்கு விளங்கும்.

நிலைமை இப்படி இருக்கும்போது, சம்பளமும் வாங்காதே—நஷ்ட ஈடும் கிடையாது என்றால், பள்ளிக்கூடங்களை மூடுவதைத் தவிர வேறு வழி ஏது பள்ளிக்கூட மானேஜர்களுக்கு ?

ஒரு வேளை இப்படியெல்லாம் பள்ளிக்கூட நிர்வாகிகளை சங்கடத்திற்கு உள்ளாக்கி, அதன் மூலம் எயிடட் பள்ளிக்கூடங்களை மூடும்படி செய்வதுதான் அழகப்பா குழுவின் நோக்கமோ என்றுகூட நாம் ஐயப்படுகிறோம்.

அழகப்பா குழுவிற்கோ, அல்லது அரசாங்கத்திற்கோ அப்படிப்பட்ட உள்நோக்கம் ஏதாவது இருந்தால் அதைத் தெளிவாகச் சொல்லி விடட்டும்.

எயிடட் பள்ளிகள் இந்த மாகாணத்தில் இருக்க வேண்டுமா வேண்டாமா ?

இந்தப் பிரச்சினையில் அரசாங்கம் தெளிவான ஒரு முடிவுக்கு வந்தாக வேண்டும்.

இது, ஆரம்பக் கல்வியின் வளர்ச்சியை அல்லது வீழ்ச்சியை உருவாக்குகிற ஓர் அடிப்படைப் பிரச்சினை.

இத்தகைய மிக முக்கியமானதோர் பிரச்சினையில் குழப்பம் கூடாது.

ஐயத்திற்கு இடமான தெளிவற்ற திட்டங்கள் கூடாது.

இதுதான் அரசாங்கத்தின் நோக்கம் என்பதைத் திட்டவட்டமாகத் தெரிந்துகொள்ள முடியாத 'விசித்திரமான போக்குகள் விபரீதமான தன்மையில் உருவாகக் கூடாது.

எயிடட் பள்ளிகள் இருக்கத்தான் வேண்டும்—அவற்றால் சிறந்த பலன் இருக்கத்தான் செய்கிறது என்பது அரசாங்கத்தின் கருத்தாக இருந்தால் அதனைத் தெளிவாக அறிவித்து விடட்டும்.

ஒரு வேளை, எயிடட் பள்ளிகள் தேவையேயில்லை—அவற்றால் பயன் எதுவுமே இல்லை என்பது அரசாங்கத்தின் எண்ணமாக இருந்தால், அதனையும் அழுத்தந் திருத்தமாக அறிவித்து விடட்டும்.

எயிடட் பள்ளிகளும் இருக்கத்தான் வேண்டும். அவற்றில் சம்பளமும் வசூலிக்கக் கூடாது என்பது அரசியலாரின் எண்ணமாக இருந்தால் போதுமான நஷ்ட ஈட்டைத் தந்தே ஆகவேண்டும்.

இல்லை—எயிடட் பள்ளிகளே தேவையில்லை என்பது அரசாங்கத்தின் கருத்தானால்—அந்தக் கருத்தை அறிவிப்பதற்கு முன்னால், அப்படிப்பட்ட முடிவுக்கு வருவதன் மூலமாக அரசாங்கத்திற்கு ஏற்படக்கூடிய நஷ்டம் எவ்வளவு என்பதை அரசாங்கம் நன்றாக உணர்ந்து கொள்ளட்டும்.

எயிடட் நிர்வாகிகள் தங்களுடைய பள்ளிகளை மூடிவிட்டால், அரசாங்கமே அந்தப் பள்ளிகளை எடுத்து நடத்தவேண்டி வரும். அல்லது புதிய பள்ளிகளைத் தொடங்க வேண்டியிருக்கும்.

ஒவ்வோர் பள்ளிக்கூடத்திற்கும், அது தனிப்பட்டவர்களிடம் இருக்கும் இதுபோது அரசாங்கத்தால் செலவிடப்படும் தொகையைவிட, அரசாங்கமே அதனை எடுத்து நடத்தும் போது, குறைந்தது மூன்று மடங்கு அதிக செலவாகும்.

இதிலே எவருக்கும் எந்த அளவிலும் ஐயம் இருக்கத் தேவையில்லை.

செலவு அதிகமாகும் என்பது மட்டுமல்ல, தரமும் குறைந்து விடும்.

இதிலேயும், எவருக்கும் ஐயம் இருக்க வேண்டியதில்லை.

தனிப்பட்டவர் பள்ளிகளைவிட முனிசிபல் பள்ளிகளில் தரம் குறைவு—இதனைக் கல்வித்துறை அநுபவம் படைத்த அத்தனைப் பேரும் ஒப்புக் கொள்கிறார்கள்.

முனிசிபல் பள்ளிகளில் உள்ள இந்த நிலைதானே அரசாங்கப் பள்ளிகளிலும் இருக்க முடியும்?

ஓர் எயிடட் பள்ளியின் மானேஜர், தன்னுடைய பள்ளிக்கூடத்தைத் தன்னுடைய கண்ணின் மணியாகக் கருதி அன்புடன் பாராட்டி அருமையாக வளர்த்து வருகிறார். இரவும் பகலும் அதன் முன்னேற்றத்திற்காகப் பாடுபட்டு வருகிறார். அதனுடைய உயர்வு தாழ்வுகளைத் தன்னுடைய உயர்வு தாழ்வுகளாகக் கருதி, அதனுடைய சுகதுக்கங்களைத் தன்னுடைய சுகதுக்கங்களாக எண்ணி அதன்படி நடந்து வருகிறார்.

அரசாங்கத்திடமிருந்து மாத ஊதியத்தைப் பெற்று, அந்த ஊதியத்திற்காகப் பள்ளிக்கூடத்தை நடத்தக்கூடிய ஒரு மானேஜருக்கு, அந்தப் பள்ளிக்கூடத்தின் முன்னேற்றத்தில், ஓர் எயிடட் மானேஜருக்கு இருக்கக்கூடிய அளவுக்கு அக்கறை இருக்க முடியுமா?

கடிகாரத்தைப் பார்த்து வேலை செய்துவிட்டு, காலண்டரைப் பார்த்து சம்பளம் வாங்கக்கூடியவர் தானே ஓர் அரசாங்க அலுவலர்? எனவே தான் நாம் கூறுகிறோம்—எயிடட் பள்ளிகளை அரசாங்கப் பள்ளிகளாக மாற்றினால் கல்வியின் தரம் குறையுமே தவிர அதிகமாகாது என்று.

இந்தப் பிரச்சினைகளையெல்லாம் அலசி ஆராய்ந்து நின்று நிதானித்து ஒர் முடிவுக்கு வராமல், அழகப்பா குழுவினர், "சம்பளத்தையும் வாங்க விடாதே—நஷ்ட ஈட்டையும் நீ கொடுக்காதே" என்று, அரசாங்கத்திற்கு அறிவுரை கூற முன் வந்திருப்பது வேதனை நிரம்பிய விசித்திரம் என்றே கூறவேண்டும்.

அழகப்பா அறிக்கையில் இப்படிப்பட்ட விபரீதங்கள் இன்னும் பல இருக்கின்றன. அவற்றில் சிலவற்றை அடுத்த இதழில் ஆராய்வோம். ஆனால் ஒன்றை மட்டும் இப்போதே தெளிவாகத் தெரிவித்துவிட விரும்புகிறோம்.

இந்த மாகாணத்தின் ஆரம்பக் கல்வி சிறந்ததோர் எதிர்காலத்தைப் பெற்று ஒளி வீசித் திகழ வேண்டுமானால் அழகப்பா அறிக்கையின் மிகப் பெரும் பகுதி, அச்சம் தயை தாட்சண்யமின்றி ஒதுக்கித் தள்ளப்பட வேண்டும்

ஆம்! நிச்சயமாக!!

வேலூர் அழைக்கிறது!
நண்பர்களே, வாருங்கள்!!

சென்னை மாநில எயிடட் பள்ளி மானேஜர்களே!

ஆரம்பக் கல்வியின் வளர்ச்சிக்காக அரும்பாடுபட்டு வரும் அருமை நண்பர்களே!

சிறப்புமிக்க பள்ளிகளைப் பண்புமிக்க முறையில் நடத்திவரும் ஆற்றல் மிக்க தோழர்களே!

எழுத்தறிவிக்கும் எழில்மிகு பணிபுரி ஏந்தல்களே!

வாருங்கள்—வாருங்கள்—விரைந்தோடி வாருங்கள்.

வடார்க்காடு மாவட்ட வேலூர் அழைக்கிறது—அந்த அன்பழைப்பை ஏற்க வாருங்கள்.

சென்னை மாநில எய்டட் பள்ளி மானேஜர்களின் அவசர மாநாடு, 19–11–55 அன்று, வேலூர் இலட்சுமணசாமி மண்டபத்தில் சிறப்பான முறையில் நடைபெற இருக்கிறது.

மாநாட்டிற்கு முதுபெரும் தலைவர் டாக்டர் வரதராசலு நாயுடு தலைமை வகிக்கிறார்.

மாநாட்டிற்கான ஏற்பாடுகள் மும்முரமாக நடைபெற்று வருகின்றன.

அந்த மாநாட்டிற்குத்தான் வாருங்கள் வாருங்கள் என்று, வேலூர் நகரம், உங்களை, விரைந்து அழைக்கிறது.

எயிடட் பள்ளிகளுக்குப் பேராபத்து ஏற்பட்டிருக்கிற நேரம் இது.

அந்தப் பள்ளிகளுக்கு இனி வாழ்வு உண்டா இல்லையா என்பதை முடிவு கட்டியாகவேண்டிய வேளை இது.

இப்படிப்பட்ட நேரத்தில் நடைபெறும் மாநாட்டிற்கு நீங்கள் ஒவ்வொருவரும் தவறாமல் வந்து தீரவேண்டியது அவசியத்திலும் அவசியமாகும்.

இந்த நேரத்தில் உறங்கிக் கிடந்துவிட்டு, பிறகோர் நாள், விழித்தெழுந்து வீரமுழக்கம் இடுவதால் துளியும் பயனில்லை.

உங்களுக்குத் தெரியும். ஆண்டுக்கு 1200 ரூபாய்க்குக் குறைவான வருமானமுள்ள பெற்றோர்களின் பிள்ளைகளிடமிருந்து 1 முதல் 8-வது வகுப்பு வரை கட்டணம் எதுவும் வசூலிக்கக் கூடாது என்று 19-5-55 அன்று சென்னை அரசாங்கம். உத்தரவு பிறப்பித்தது.

அப்படிக் கட்டணம் வசூலிக்காததால் பள்ளிக்கூட நிர்வாகிகளுக்கு ஏற்படுகிற நஷ்டம் முழுவதையும் அரசாங்கம் ஈடுகட்டித் தரும் என்றும் அதே உத்தரவு அறிவித்தது.

ஜூன், ஜூலை, ஆகஸ்டு, செப்டம்பர், அக்டோபர், நவம்பர்—மாதங்கள் உருண்டோடியபடி இருக்கின்றன.

என்றாலும் நஷ்டஈடு இதுவரை வந்தபாடில்லை.

நஷ்ட ஈடு வராத காரணத்தால், இந்த ஐந்து மாத காலமாக, எயிடட் பள்ளி மானேஜர்களாகிய நீங்கள், அந்தந்த மாதச் செலவைச் சரிக்கட்ட முடியாமல் அடைந்து வருகிற வேதனை சொல்லுந்தரத்ததல்ல,

வீட்டு வாடகையை எப்படித் தருவது—ஆயாக்களின் சம்பளத்திற்கு எங்கே போவது—வேலைக்காரிகளின் ஊதியத்தை எவ்வாறு கொடுப்பது—பள்ளிக்கூடத்திற்குத் தேவையான பண்டங்கள் கருவிகளை எப்படி வாங்குவது—ஆசிரியர்களின் பிராவிடண்ட் நிதிக்குத் தரவேண்டிய தொகைக்குப் பணத்தை எங்கே தேடுவது—இப்படி ஒவ்வொரு பிரச்சினையையும் எண்ணி எண்ணி ஒவ்வோர் மாதமும் நீங்கள் தத்தளிக்கிறீர்கள். தவிக்கிறீர்கள். திண்டாடுகிறீர்கள்.

ஆனால் அரசாங்கமோ இன்னமும் அசைந்து கொடுக்கவில்லை.

நஷ்ட ஈட்டை இன்னமும் உங்களுக்கு அனுப்பி வைக்கவில்லை.

அனுப்பாதது மட்டுமா? வேல் வீசிப் புண்ணை உண்டாக்கி விட்டு, வெந்த புண்ணிலே மற்றுமோர் கோல் கொண்டு துழாவுவது போல,நஷ்ட ஈட்டைத் தாராததோடு நில்லாமல்,நீங்கள் பிள்ளைகளிடமிருந்து வசூலிக்கும் கட்டணத்தில் மூன்றில் ஒரு பங்குகூட இல்லாத ஒரு கட்டண விகிதத்தைக் காட்டி, இந்த விகிதத்தின்படிதான் நஷ்ட ஈடு தரப்படும் என்று 14-9-55 அன்று ஓர் உத்தரவையும் பிறப்பித்திருக்கிறது.

சம்பளம் கட்டிப் படிக்கும் வசதியுள்ள பிள்ளைகளிடமிருந்தும் இதே விகிதத்தின்படிதான் கட்டணம் வசூலிக்கப்பட வேண்டும் என்றும் அந்த உத்தரவு அறிவித்திருக்கிறது.

இப்படி வாங்கப்படும் கட்டணமும் 11 மாதங்களுக்கு மட்டும் தான் வசூலிக்கப்படவேண்டும் என்றும் அந்த உத்தரவு தெரிவித்திருக்கிறது.

அரசாங்கம் தெரிவித்துள்ள கட்டண விகிதங்களின்படிதான் கஷ்ட ஈடு அளிக்கப்படுமென்றால் எயிடட் பள்ளிகளை மூடிவிடுவதைத் தவிர அதன் நிர்வாகிகளுக்கு வேறு வழியே கிடையாது.

அந்தச் சின்னஞ்சிறு நஷ்ட ஈட்டைக் கொண்டு பள்ளிக்கூடங்களை நடத்துவது என்பது ஒருநாளும் முடியாத காரியம்.

அரசாங்கத்தின் போக்குதான் இப்படி யென்றால், டாக்டர் அழகப்பசெட்டியாரின் தலைமையில் அமைக்கப்பட்ட கமிட்டியோ, இன்னமும் ஒரு படி மேலே சென்று இதனினும் மோசமான ஒரு வார்த்தையை வீசியிருக்கிறது.

ஓராண்டுக் காலத்திற்குப் பிறகு எந்த ஆரம்பப் பள்ளியும் சம்பளம் வாங்கக் கூடாது என்று அரசாங்கம் அறிவித்துவிடவேண்டும். அந்த ஓராண்டுக் காலம் முடிந்தவுடனே, அரசாங்கம், ஆரம்பப் பள்ளிகளுக்கு நஷ்ட ஈடு தரவேண்டிய அவசியமுமில்லை.

இது அழகப்பா குழுவின் விபரீத யோசனை.

சம்பளமும் வாங்காதே—நஷ்ட ஈடும் கேட்காதே என்கின்றனர் டாக்டர் அழகப்பாவும் அவர்தம் நண்பர்களும்.

அப்படியானால் பள்ளிக்கூடத்தை எப்படி நடத்துவது ?

டாக்டர் அழகப்பாவின் குழு பதில் தரவில்லை இக் கேள்விக்கு.

பதிலென்ன இக் கேள்விக்கு?

கேட்டாகவேண்டும் நாம். நியாயத்திற்காகப் போராடியாக வேண்டும். உண்மை நிலைமைகளை விளக்கித் தீரவேண்டும்.

அரசாங்கத்திற்கும் சரி, பொதுமக்களுக்கும் சரி, சட்டசபை உறுப்பினர்களுக்கும் சரி, நம்முடைய நிலை இன்னது என்பதை நாம் உடனே சொல்லியாகவேண்டும்.

நஷ்ட ஈட்டைத் தந்தாகவேண்டும்—அதுவும் நியாயமான அளவு தந்தாகவேண்டும் என்பதை நாம் வற்புறுத்தவேண்டும்.

எயிடட் பள்ளிகள் இல்லாவிட்டால் ஆரம்பக் கல்வியின் வளர்ச்சி குன்றும்—பள்ளிகளின் எண்ணிக்கை சுருங்கும்—படிக்கும் பிள்ளைகளின் எண்ணிக்கை குறையும்—அரசாங்கத்தின் செலவு

கூடுதலாகும்—கல்வியின் தரம் குறையும் என்பதையெல்லாம் நாம் விளக்கியாக வேண்டும்.

ஆபத்துகள் அடுக்கடுக்காக நம்மை நோக்கிப் பாய வருகிற நேரம் இது.

அவற்றை உடனே நாம் தடுத்து நிறுத்தவேண்டும்.

எனவேதான் அவசர மாநாடு—வேலூரில்.

தவறாமல் வாருங்கள்—திட்டங்கள் தீட்டுங்கள். அலை அலையாக எழும் ஆபத்துக்களைப் பொடிப் பொடியாக உடைத்தெறியுங்கள்.

அவசர மாநாடு—ஆனால் அவசியம் மிக்க மாநாடு—எயிடட் பள்ளிகளின் எதிர்காலத்தையே நிர்ணயிக்கிற மாநாடு.

நவம்பர் 19—வேலூர்—சிறப்பு மாநாடு! கவனமிருக்கட்டும்! கவனமிருக்கட்டும்!! ★

"அறிவுக் கதிர்"

தொகுத்தவர் : பா. குருமூர்த்தி, ஆசிரியர்,
இந்துநாடார் தொடக்கப்பள்ளி, வேடப்பட்டி,
திருநெல்வேலி ஜில்லா.

1. கலை என்பது கடந்த காலத்தின் கன்னி. நிகழ்காலத்தில் மனைவி. வருங்காலத்தில் தாய்.

—"காண்டேகர்"

2. பகையை பகையால் வெல்ல முடியாது; அன்பால் அனைத்தையும் வெல்லலாம்.

—"சித்தார்த்தர்"

3. நாடு நலம் பெற வேண்டுமானால் சாதிச் சண்டை, சமயச் சண்டை, பிற மூடச் சண்டைகள் அனைத்தையும் கட்டிச் சுருட்டி வங்காளக்குடாக் கடலில் எறிதல் வேண்டும்.

—"திரு. வி. க."

ஆரம்பக் கல்விச் சீர்திருத்தம்

அழகப்ப செட்டியார்க் கமிட்டி சிபாரிசுகள்

ஆரம்பக் கல்விச் சீர்திருத்த விஷயத்தில் கவனம் செலுத்தி சிபாரிசுகளைச் செய்ய நியமிக்கப்பட்ட டாக்டர் அழகப்ப செட்டியார்க் கமிட்டியின் யாதாஸ்து அதிகார பூர்வமாகப் பிரசுரிக்கப்பட்டுள்ளது. அதன் சிபாரிசுகள் இங்கு தரப்படுகின்றன.

1. ஆரம்பக் கல்விப் படிப்பு 8 ஆண்டுகள் கொண்டதான, ஒரே அமைப்புடன் கூடிய பாடத் திட்டத்துடன் இருக்க வேண்டும். பள்ளியில் மாணவர்கள் சேர்க்கப்பட வேண்டிய வயது 5 வயது பூர்த்தியான பிறகு.

2. "உயர் எலிமென்டரி", "ஸீனியர் பேஸிக்", "மிடில்" என்ற பெயர்களை மாற்றவேண்டியதில்லை. அம்மூன்று வகைப் பள்ளிகளும் ஸீனியர் பேஸிக் அமைப்புக்குப் பொருத்தமாக மாறவேண்டும் என்பதே நோக்கம். அந்த நோக்கம் ஈடேறும் வரையில் இப்போதுள்ள பெயர்கள் நீடிக்கலாம்.

3. அவ்வாறு மாறுகிறவரையில் எலிமென்டரி பாடத் திட்டமும் "மிடில் ஸ்கூல்" பாடத் திட்டமும் கிட்டத்தட்ட ஒரே மாதிரியாக அமைக்கப்படவேண்டும்.

6 வது வகுப்பிலிருந்து 8 வது வகுப்பு முடிய எல்லாப் பள்ளிகளிலும் ஆங்கிலம் கட்டாயப் பாடமாக்கப்பட வேண்டும்.

"உயர் எலிமென்டரி"யில் ஹிந்தி போன்ற ஒரு புது மொழியைச் சேர்க்கவேண்டாம்.

4. ஒவ்வொரு "உயர் எலிமென்டரி" பள்ளிக்கும் உடனடியாக இன்னும் ஒரு ஆசிரியர் அதிகப்படியாகச் சேர்க்க அனுமதி தரவேண்டும்.

இவர் பிரதேச மொழியில் பண்டிதராக இருக்க வேண்டும். பண்டிதர்கள் போதிய தொகையில் கிடைக்காவிடில் "செகண்டெரி கிரேட்" அல்லது ஸீனியர் பேஸிக் பயிற்சி பெற்ற ஆசிரியராக இருக்கவேண்டும்.

5. உயர் எலிமென்டரியில் எட்டாவது வகுப்பில் சர்க்கார் பரீட்சை வைத்து சர்டிபிகேட் வழங்கி மறுபடியும் பரீட்சை எழுதாமலே ஹைஸ்கூல் 4-வது படிவத்தில் சேருவதற்கு இப்பொழுதுள்ள முறை நீடிக்கலாம்.

பாடத் திட்டம்

6. ஆரம்பப் பள்ளிகளுக்கு 1939-ல் ஏற்படுத்தப்பட்ட

பாடத் திட்டத்தைத் திருத்தி யமைப்பது பற்றி ஆலோசனை செய்ய ஒரு கமிட்டி நியமிக்கலாம்.

7. ஆதாரக் கல்வியின் சில அம்சங்கள்—அதாவது சுகாதாரமான வாழ்க்கைப் பழக்கம், தன்னம்பிக்கை, கலாசாரத் தொடர்பு முதலிய அம்சங்களை ஆரம்பக் கல்விப் பாடத் திட்டத்திலேயே சேர்த்துவிடலாம்.

போதனை நேரம்

8. ஆரம்பப் பள்ளிகளுக்கு இப்பொழுது வருஷத்தில் 220 நாட்கள் பள்ளிக்கூடம் இருக்கிறது. இதைக் குறைக்கவேண்டியதில்லை.

9. ஒவ்வொரு நாளும் எத்தனை மணி நேரம் படிப்பு என்பதையும் குறைக்க வேண்டியதில்லை.

ஆதாரக் கல்வி

10. 'மிடில்' பள்ளிகளில் 1, 2, 3-வது படிவங்களும் செகண்டரி பள்ளிக்கூடங்களில் ஆரம்ப வகுப்புகளும் படிப்படியாக ஆதாரக் கல்வியமைப்புக்கு ஏற்றபடி மாற்றப்படவேண்டும். முதலில் செகண்டரி பள்ளிகளிலுள்ள பிரைமரி வகுப்புகளை எடுத்துக் கொள்ளலாம்.

11. ஆதாரப் பள்ளிகளில் பொருளுற்பத்தி செய்யும் தொழிற்கல்வியை மூன்றுவது வகுப்பிலிருந்து ஆரம்பிக்கலாம். முதல் இரண்டு வகுப்புக்களில் செய்கின்ற வேலை லாபகரமாக இருக்கின்றதா என்பதில் கவனம் செலுத்தாமல் ஓரளவு கைப்பழக்கம் ஏற்படுவதை மட்டும் நோக்கமாகக் கொண்டு சில வேலைகளுக்கு ஏற்பாடு செய்யலாம்.

12. பெரும்பான்மையான ஆதாரப் பள்ளிகளில் தோட்ட வேலையே தொழிற் பயிற்சிக்கு முக்கிய ஆஸ்பதமாகக் கொள்ளலாம். சாத்தியமான இடங்களில் பண்டங்கள் செய்தல், பாய் நெய்தல் முதலியவற்றை ஏற்படுத்திப் பார்க்கலாம்.

13. ஆதாரப் பள்ளிகளுக்கும் சரி, சாதாரண எலிமென்டரி பள்ளிக்கூடங்களுக்கும் சரி, போதனைக்கு உதவியாக ஆசிரியர்களுக்கு வழிகாட்டி புத்தகங்கள், படங்கள் இன்னும் வேண்டிய கருவிகள் முதலிய வசதிகள் ஒவ்வொரு பள்ளிக்கூடத்திலும் அளிக்கப்படவேண்டும்.

14. ஆதாரக் கல்வியில் தயாரிக்கப்படும் பொருள்களை அந்த மூலப் பொருளின் விலையில் ஒரு பகுதியைக் கொடுத்து மாணவர்களே உபயோகித்துக்கொள்ள அனுமதிக்கவேண்டும்.

நிர்வாகம்

15. தனி நபர்களால் நடத்தப்படும் ஒவ்வொரு பள்ளிக்கூடத்திற்கும் சர்க்கார் குறிப்பிடும் ஒரு தேதிக்குள் ஒரு நிர்வாகக் கமிட்டி அமைத்து ரிஜிஸ்தர் செய்யப்படவேண்டும். நிர்வாகம் இந்தக் கமிட்டியினிடமே

இருக்கவேண்டும். ஆசிரியரே மானேஜராக இருந்து வரும் பள்ளிகளுக்கும் இது பொருந்தும்.

16. இவ்வாறு திருத்தி அமைக்கப்படும் கமிட்டிகளுக்கு சர்க்கார் ஒன்று அல்லது இரண்டு பிரதிநிதிகளை அங்கத்தினர்களாக நியமிக்கலாம்.

17. எந்தப் பள்ளிக்கூடமாவது இவ்வாறு ஒரு நிர்வாகக் கமிட்டியை அமைத்துக்கொள்ளத் தவறுமாயின், அந்தப் பள்ளிக்கூடத்தை சர்க்கார் எடுத்துக்கொண்டு, இந்த சிபாரிசுகளில் பின்னால் சொல்லப்போகிற "பிரதேச போர்டு"களிடம் ஒப்படைக்கலாம்.

18. ஏற்கெனவே இருந்து வரும் நிர்வாகக் கமிட்டிகளில் சர்க்கார் தன் சார்பில் ஒன்று அல்லது இரண்டு பிரதிநிதிகளை நியமிக்கலாம்.

19. பல பள்ளிக்கூடங்களை வைத்து நிர்வகிக்கும் ஸ்தாபனங்கள் தம்மிடமுள்ள ஆரம்ப பள்ளிகளுக்கென்று தனியாக ஒரு நிர்வாகக் கவுன்ஸில் ஏற்படுத்தவேண்டும். அந்தக் கவுன்ஸிலின் அமைப்பு சர்க்காரின் கல்வி இலாகா ஒப்புக்கொள்ளக் கூடியதாக இருக்கவேண்டும். அந்தக் கவுன்ஸிலுக்கு சர்க்கார் தம் சார்பில் ஒன்று அல்லது இரண்டு பிரதிநிதிகளை நியமிக்க வேண்டும்.

20. நகர சபைகள் தமது பள்ளிக்கூடங்களைத் தாமே நிர்வகித்துக்கொள்ளலாம்.

21. நகர சபைகள் நடத்தும் பள்ளிக்கூடங்கள் திறமையுடன் வேலை செய்யும் பொருட்டு சர்க்கார் போதிய உதவியளிக்க வேண்டும்.

22. தற்காலம் ஜில்லா போர்டுகள் நிர்வாகத்திலும் பஞ்சாயத்துக்களின் நிர்வாகத்திலும் இருந்துவரும் பள்ளிகளின் நிர்வாகத்தை பிரதேச போர்டுகளிடம் ஒப்படைக்கவேண்டும்.

23. இனிமேல் எந்தப் புதிய பள்ளிக்கூடமும் நகர சபைகளாலோ அல்லது பிரதேச போர்டுகளாலோதான் ஆரம்பிக்கப்படவேண்டும்.

24. சர்க்கார் தொடர்புள்ள ஸ்தாபனங்களால் நடத்தப்படும் பள்ளிகளின் நிர்வாகம் பற்றிய விதிகள் தாராளத் தன்மை வாய்ந்ததாக இருப்பதோடு அதிகமான பண உதவியும் செய்யப்படவேண்டும்.

இலவசக் கல்வி

25. தனியார் நடத்தும் பள்ளியாயிருந்தாலும் சரி, பொது ஸ்தாபனங்கள் நடத்தும் பள்ளியாயிருந்தாலும் சரி, மாணவர்களிடமிருந்து சம்பளம் வாங்கக்கூடாது.

26. "எலிமென்டரி கிரேட்' ஆரம்ப ஆசிரியர் பயிற்சிக்கு பொறுக்கப்படுபவர் எஸ். எஸ்.

எல். ஸி. பரீட்சைக்கு உட்கார்ந்தவராக இருக்கவேண்டும். அவர் பரீட்சையில் தேறியிரா விட்டாலும் (காலேஜுக்குப் போவதற்குத் தகுதியான மார்க் பெற்றவராக இராவிட்டாலும்) குறிப்பிடக்கூடிய ஓரளவு மார்க்குகள் வாங்கியிருக்க வேண்டும். அல்லது ஹையர் எலிமென்டரி எட்டாவது வகுப்பு சர்க்கார் பரீட்சையில் தேறியிருக்கவேண்டும். எஸ். எஸ். எல். ஸி. பரீட்சை கொடுத்தவர்களுக்கு முதன்மையாக இடந்தரவேண்டும்.

27. 'எலிமென்டரி கிரேட்' ஆசிரியர், 'செகண்டரி கிரேட்' ஆசிரியர் ஆகிய இரு சாராருக்கும் பயிற்சி காலம் இப்பொழுது இருப்பது போலவே இரண்டு ஆண்டுகள் என்றே இருக்க வேண்டும்.

28. மற்ற பாடங்களைப் போதிக்கப் பயிற்சி யளிப்பது போலவே உடற் பயிற்சியளிக்க இவ்வாசிரியர்களுக்குப் பயிற்சி யளிக்கவேண்டும்.

29. ஆரம்பப் பள்ளியில் 1, 2, 3-வது வகுப்புகளுக்கு சாத்தியமான வரையில் பெண்களை ஆசிரியப் பதவிக்கு நியமிக்கப் படவேண்டும்.

30. விவாகமான பெண்களை நாள்தோறும் காலை அல்லது மாலை ஏதேனும் ஒருவேளையில் மட்டும் பள்ளிக்கூடங்களில் ஆசிரியாக இருக்கும்படி நியமிக்கலாம். பயிற்சி பெறாத ஆசிரியர்களை நியமிப்பதை விட, ஆசிரியப் பயிற்சி பெற்ற பெண்களை இவ்வாறு நியமிப்பது விரும்பத்தக்கதாகும். இவ்வாறு ஒரு வேளை மட்டும் வேலை செய்யும் பெண் ஆசிரியர்களை நியமிப்பதாயின் இவர்களை இருவர் இருவராக நியமிக்கவேண்டும்; உயர் எலிமென்டரி வகுப்புகளுக்குத்தான் இவர்களை உபயோகப்படுத்த வேண்டும். கீழ்த்தர எலிமென்டரி வகுப்பிலுள்ள குழந்தைகளுக்கு எப்போதும் ஒரே ஆசிரியர் இருப்பதுதான் நலம்.

31. ஒவ்வொரு ஆசிரியரும் ஐந்தாண்டுக்கு ஒரு முறையாவது சொற்பகால 'மறு பயிற்சி' (ரிப்ரஷர்) வசதிகள் பெறும்படி ஏற்பாடு செய்யவேண்டும்.

32. ஆசிரியர்களுக்கு பிராவிடெண்ட் பண்டு பென்ஷன் முறையைச் சர்க்கார் ஏற்படுத்தத் தீர்மானித்திருக்கின்றது. இதனுடன் கட்டாய இன்ஷ்யூரன்ஸுக்கும் ஏற்பாடு செய்யலாம்.

33. ஆசிரியர்களைப் போன்ற அதே அளவு பொதுக்கல்வி பெற்றவர்களுக்கு வேறு துறைகளில் கொடுக்கப்படும் சம்பளத்தை விட ஆசிரியர்களுக்குக் கொடுக்கும் சம்பளம் அதிகமாக இருக்க வேண்டும். ஏனென்றால் பொது கல்வி பயின்றது அல்லாமல் இவர்கள் ஆசிரியர் பதவிக்காகத் தனிப் பயிற்சியும் பெற்றிருக்கிறார்கள். உடனடியாகவே திருப்திகரமான சம்பளம் கொடுக்

கப்படாவிட்டாலும் இப்போதே தாமதமின்றி சம்பளங்கள் ஓரளவாவது உயர்த்தப்படவேண்டும்.

34. பள்ளிக்கூடம் இருக்கும் ஊரிலேயே ஆசிரியருக்கு ஜாகை (வீட்டு) வசதி ஏற்பாடு செய்வதில் முக்கியமாக கவனம் செலுத்தவேண்டும்.

புதிதாகப் பள்ளிக்கூடங்கள் ஆரம்பிக்கும்போது தொடக்கத்திலிருந்தே ஆசிரியருக்கு ஜாகை வசதி ஏற்படுத்தவேண்டும்.

35. பிராவிடண்ட் பண்டு நிதியில் கணக்கு முடித்து பட்டுவாடா செய்வதில் தாமதத்தைத் தவிர்க்கும் முறையில் நடைமுறைகளை திருத்தியமைக்க வேண்டும்.

கட்டாயக் கல்வி

36 கட்டாயக் கல்வி முறை ஏற்படுத்துவதற்கு முன்னதாக, அதாவது அதற்கு முதற்படியாக முன்னூறுக்கு மேற்பட்ட ஜனத்தொகையுள்ள ஒவ்வொரு கிராமத்துக்கும் அதே ஊரிலோ, அல்லது வெகு சமீபத்திலுள்ள ஊரிலோ ஒரு பள்ளிக்கூடம் இருக்குமாறு ஏற்பாடு செய்துவிடவேண்டும்.

37. செலவில் பாதியை பொது ஜனங்கள் ஏற்றுக்கொள்ளத் தயாராயிருக்குமிடங்களில் பள்ளி மாணவர்களுக்கு நடுப்பகல் உணவு அளிக்க ஏற்பாடு செய்யவேண்டும்.

38. பள்ளிக்கூடத்தில் சேர்ந்த மாணவர்கள் ஒரு குறிப்பிட்ட வகுப்பு வரையில் பள்ளிக்கூடத்துக்கு வரவேண்டும் என்ற ஒருவகையான கட்டாய முறையை சில குறிப்பிட்ட இடங்களில் அமுலுக்குக் கொண்டு வருவது பற்றி கவனம் செலுத்தலாம்.

கட்டிடங்கள், நிலம், கருவிகள்

39. பள்ளிக்கூடங்களுக்குச் சரியான கட்டிடங்கள் கட்டப்படவேண்டும். இதற்கு ஒரு தீவிரமான பிரசார முயற்சி தேவை. அபிவிருத்தி இலாகாக்களின் உதவியையும் இதில் பயன்படுத்திக்கொள்ளவேண்டும்.

40. பள்ளிக்கூடங்களில் சரியான சுகாதார வசதிகள் அமைக்கப்படவேண்டும்.

41. சர்க்காருக்குச் சொந்தமான நிலங்கள் இருக்குமிடங்களில் எல்லாம் பள்ளிக்கூடங்களுக்கு விளையாட்டு மைதானம், தோட்டம் இவைகளுக்குத் தாமதமின்றி ஜாரி செய்யப்படவேண்டும்.

42. ஒவ்வொரு பள்ளிக்கூடத்திற்கும் ஒரு தகுதியான புத்தகாலயம் இருக்கவேண்டும்.

43. 'உயர் எலிமென்டரி' பள்ளி ஒவ்வொன்றிலும் போதுமான போதனைக் கருவிகளும் சாதனங்களும் இருக்கவேண்டும்.

பாட புத்தகங்கள்

44. சரியான பாட புத்தகங்கள் தயாரிப்பதில் கல்வி இலாகா

யுக்கும் பிரசுரகர்த்தாக்களுக்கும் ஆலோசனை கூறுவதற்காக வேண்டிய ஆராய்ச்சிகள் நடத்த ஏதேனும் ஒரு ஆசிரியர் பயிற்சிக் கல்லூரியில் ஒரு "ஆராய்ச்சிப் பகுதி" ஏற்படுத்தவேண்டும்.

45. குறிப்பிட்ட காரணங்களாலல்லாது பாட புத்தகத்தை அடிக்கடி மாற்றக்கூடாது. மூன்று வருடத்திற்கு ஒரு முறைதான் மாற்றலாம்.

சிறு குழந்தைகள் பயிற்சி

46. ஐந்து வயதுக்கும் குறைவான சின்னஞ் சிறு குழந்தைகளுக்கு 'கிண்டர் கார்டன்' பள்ளிகள் ஏற்படுத்தும் பொறுப்பை சர்க்கார் எடுத்துக் கொள்ள முடியாது. ஆனல் தனி முயற்சியில் யாராவது அம்மாதிரி பள்ளிகள் ஆரம்பித்தால் அவற்றுக்கு சர்க்கார் உதவி செய்யப் பணம் கொடுக்கலாம்.

ஓற்றை ஆசிரியர் பள்ளிகள்

47. பள்ளிக்கூடத்துக்கு அருகாமையிலேயே ஜாகை வசதி ஏற்படுத்திக் கொடுத்தால் ஒற்றையாசிரியர் பள்ளிகளில் ஆசிரியராக வர சிலருக்கு ஊக்கம் ஏற்படும்.

48. ஆசிரியர்க்குப் பயிற்சியளிக்குப்போது ஒற்றையாசிரியர் பள்ளிகளின் பிரச்னைகளையும் கருத்தில் கொண்டு ஒரே ஆசிரியர் ஒன்றுக்கு மேற்பட்ட வகுப்புகளை எவ்வாறு சமாளிப்பது என்பதிலும் பயிற்சியளிக்கப்படவேண்டும்.

49. 'செகண்டரி கிரேட்' பயிற்சி பெற்றவர்களைத் தான் ஒற்றைபாசிரியர் பள்ளிகளுக்கு நியமிக்கலாம். பயிற்சியில்லாதவர்களை நியமிக்கக்கூடாது.

50. ஒரு ஒற்றைபாசிரியர் பள்ளியானது நாளாவட்டத்தில் பல ஆசிரியர்கள் கொண்ட பள்ளியாக ஆகும் என்ற நம்பிக்கைக்கு இடமில்லையாயின் அப்படிப்பட்ட பள்ளியில் 1, 2, 3 ஆகிய மூன்று வகுப்புகளே இருக்கலாம். அந்தப் பள்ளியை வேறு பள்ளிக்கூடங்களுக்கு மாணவர்களைச் சேர்த்துக் கொடுக்கும் 'பீடர்' பள்ளியாகவே அக்கிகரிக்கவேண்டும்.

51. குறைபாடுள்ள (அதாவது செவிடு, முடம் போன்ற அங்கஹீனம் அல்லது மந்த புத்தியுள்ள) சிறுவர்களின் தொகை பற்றி சரியான புள்ளி விவரம் திரட்டப்பட வேண்டும். இவர்களது கல்வி முன்னேற்றத்துக்குத் தனி வசதியுடன் கூடிய பிரத்தியேகப் பள்ளிகள் அமைக்கவேண்டும்.

சோதனைப் பள்ளிகள்

52. ஏதேனும் புதிதான போதனை முறைகளைக் கையாண்டு பார்த்து ஆராய்ச்சி செய்வதற்கான தனி முறைப் பள்ளிகள் சர்க்காரின் அனுமதியுடன் ஆரம்பிக்கப்படலாம். அவற்றுக்கு சர்க்கார் உதவியும் செய்யலாம்.

53. புத்தகப் படிப்புக்கும் தொழில் படிப்புக்கும் அப்பாற்

பட்டதாக ஆனால் சாரணப் பயிற்சி போன்றவற்றுக்கு ஏற்பாடு செய்வதற்கும் ஆரம்பப் பள்ளி ஆசிரியர்க்குப் பயிற்சியளிக்கவேண்டும்.

54. ஒவ்வொரு பள்ளிக்கூடத்துக்கும் ஒரு 'பெற்றோர்' சங்கம் இருக்கவேண்டும்.

ரேடியோ, படம் முதலிய போதனை வசதிகள்

55. கிராமங்களுக்குக் கொடுக்கப்படும் சமுதாய ரேடியோ செட்டுகளை கூடுமான வரையில் பள்ளிக்கூடங்களிலேயே வைப்பது நலம். கல்வி ஒலிபரப்புக்களை பயன்படுத்திக் கொள்ள மாணவர்களுக்கு இது உதவியாகும்.

56. ஒவ்வொரு பள்ளியிலும் ஒரு 'பொருட் காட்சி' சாலை இருக்கவேண்டும். ஒவ்வொரு ஜில்லா தலை நகரிலும் சிறுவர்களுக்கான ஒரு 'பொருட் காட்சி' சாலை ஏற்படுத்துவது பற்றி ஆலோசிக்கவேண்டும்.

57. பள்ளிகளில் பாட நேரத்தில் மதக் கல்வி போதிக்கக் கூடாது. ஆனால் ஒழுக்கம் பற்றிய போதனை இருக்கவேண்டும். இது பாடத் திட்டத்தின் பகுதியாகவே அமையவேண்டும்.

58. கல்வி இலாகா டைரக்டரின் காரியாலயத்தில் ஒரு ஆராய்ச்சிப் பகுதி ஏற்படுத்த வேண்டும். தனி ஸ்தாபனங்களும் கல்வி ஆராய்ச்சியில் ஈடுபடுவது எவ்வளவு தூரம் சாத்தியமென்பதை ஆலோசிக்க வேண்டும்.

மேற்பார்வை

59. 'டிபுடி இன்ஸ்பெக்டர்களுக்கு' இப்பொழுது இருக்கும் வேலைப்பளு குறைக்கப்பட வேண்டும். ஆகையால் இவர்களது தொகை அதிகரிக்க வேண்டும்.

60. இவ்வறிக்கையில் சிபார்சு செய்யப்படும் பிரதேச போர்டுகள் ஆரம்பப் பள்ளிகளுக்கு பார்வையாளர் (சூபர்வைஸர்)களை நியமிக்கலாம்.

61. 'செகண்டரி கிரேட்' ஆசிரியர்கள் இடையேயிருந்து சிலரை இன்ஸ்பெக்டர்களாகப் பொறுக்கும் முறை நின்றுவிட வேண்டும்.

62. ஆதாரப் பள்ளிகளுக்கென்று தனியாகக் கல்வியதிகாரிகள் நியமிக்கப்படுவது விரும்பத்தக்கதல்ல. ஜில்லா கல்வியதிகாரிகளின் தொகையை அதிகப் படுத்தலாம். ★

—"தினமணி"

உள்ளொன்றும், புறமொன்றுமாயுள்ள நண்பர்களைக் காட்டிலும் வெளிப்படையாக உள்ள பகைவனே மேல்.

—"நெப்போலியன்"

சிறு கதை

'சத்தியம்'

[தெ. பா. சம்பந்தன்]

1

'பிசு, பிசு'வென்று தூறிக் கொண்டிருந்த மழை, 'ஆடி மாதம் அழுகிற தூற்றல்' என்று யாரோ, எப்பொழுதோ அளித்த நற்சாட்சியை நினைவுறுத்துவது போல இருந்தது. மணியும் ஆறு அடித்து விட்டது. விளக்கும் வைத்தாகிவிட்டது. முன் வாசலில் 'அப்பா, அம்மா' விளையாட்டில் ஈடுபட்டு உலகத்தையே மறந்திருந்தார்கள், சரோஜாவும் சேகரனும். சரோஜா ஒரு சிறிய ஏணை கட்டி அதில் தன் 'மரப்பாச்சி பொம்மை'யை வைத்துத் தாலாட்டுப் பாடிக் கொண்டிருந்தாள். சேகர் என்ன செய்து கொண்டிருந்தானோ, சந்தடியே இல்லை! ரேஷன் அரிசியினின்று கற்களையும் உமியையும் நெல்லையும் பொறுக்கி எடுத்துவிட்டு அரிப்பதற்காக நான் அடுப்பங்கரையினுள் நுழைந்தேன். அப்போது ஓவென்று ஓலமிட்டுக் கொண்டு அறையினுள் நுழைந்தாள் சரோஜா. சேகர் கையில் பொம்மையோடு அவளைத் தொடர்ந்து வந்தான். சரோஜா அழுவதைப் பார்த்து நான் ஒருவேளை தேள் கொட்டியிருக்குமோ என்று எண்ணிப் பதறினேன். "நான் பாப்பாவைத் தூங்கப் பண்ணிக் கொண்டே இருந்தேன். என்னை கொலு விளையாட்டிற்கு கூப்பிட்டான். நான் மாட்டேன் என்றேன். அதற்காக அடித்துவிட்டானம்மா" என்று சொல்லித் தன் அழுகுரலை முன்னைவிட சற்று அதிகமாக உயர்த்திக்கொண்டாள் சரோஜா.

"ஏண்டா நீ அவளை அடித்தாய்?" என்று நான் சேகரை அதட்டிக் கேட்டேன்.

"சத்தியமாகச் சொல்றேம்மா, நான் அடிக்கவேயில்லை. பொம்மையைத்தான் பிடுங்கிக்........ ...." அவன் பேச்சில் பாதிதான் என் காதில் விழுந்தது. அதற்குள் என் மனம் சூறாவளியில் சிக்கிய புழுதியைப் போலச் சுழன்றது. நான் உள்ளம் என்ற ரயிலில் இறந்த கால நிகழ்ச்சி என்ற நிலையத்தை நோக்கிப் பயணப்பட்டேன்.

2

அப்போது எனக்கு வயது ஏழு அல்லது எட்டிருக்கும். இந்தக் காலத்துப் பிள்ளைகள் எவ்வளவோ புத்திசாலித்தனமாகப் பேசுகிறார்கள். ஆனால் அந்தக் காலத்தில் நான் எவ்வளவு 'மட்டி'யாக இருந்தேன்! அதை நினைத்தாலே எனக்கு இந்தக் காலத்துப் பிள்ளைகள் மேல் கொஞ்சம் பொறாமையாகத் தானிருக்கிறது.

நேற்று பிள்ளையார் சதுர்த்தி. படையலுக்காகப் பலகாரங்கள் செய்தேன். அப்போது சரோஜா வந்தாள். "அம்மா எனக்கு" என்று ஆவலோடு கேட்டாள் என் முகவாய்க் கட்டையைப் பற்றிக் கொண்டு! நான் சொன்னேன், "இவை சாமிக்காகச் செய்யப்பட்ட பண்டங்கள். சாமி சாப்பிடுவதற்கு முன்னால் நாம் எச்சில் படுத்தக் கூடாது. சாமி கண்ணைக் குத்தும்" என்று! அவள் அச்சத்துடன் அப்பால் சென்றுவிட்டாள். நான் இந்த நிகழ்ச்சியை அப்பொழுதே மறந்துவிட்டேன். ஆனால் நான் கூறின சொற்களை அவள் நினைவில் வைத்துக் கொண்டிருந்தாள் போலிருக்கிறது. எனவேதான் பூசை முடிந்த பின் ஆவலுடன் ஓடி வந்து தலை வாழையிலையில் படைக்கப்பட்டிருந்த தின்பண்டங்களைக் கூர்ந்து நோக்கினாள். நான் அவளை என்ன பார்க்கின்றாய் என்று அதட்டினேன். "அம்மா, வைச்சது, வைச்சபடியே இருக்கிறதே, சாமி சாப்பிடவில்லையா? ஒருவேளை சாமிக்கு இந்தத் திண்பண்டங்களெல்லாம் பிடிக்கவில்லையோ என்னமோ! ஏம்மா அதற்கு இஷ்டமானதைச் செய்யக் கூடாது?" என்று என்னையே கேட்டாள். என்ன பதில் கூறுவதென்றே எனக்குப் புலப்படவில்லை. நான் சிலையானேன்.

சரோஜா வயதிருக்கும்போது என்னை என் பள்ளித் தோழி விஜயா அடிக்கடி அடித்து இம்சைப் படுத்துவாள். வாய்விட்டு அழுதால் வாயைப் பொத்தி "மூடு வாயை" என்று அதட்டுவாள். நான் பயந்து அழுகையை அடக்கிக் கொண்டு பொங்கி வரும் கண்ணீரைத் துடைத்துக் கொள்வேன். எத்தனையோ காலமாக இது நடந்து வந்தது. ஆனால் ஒரு முறையாவது இதைப்பற்றி நான் பெற்றோர்களிடமோ அல்லது உபாத்தியாயரிடமோ முறையிட்டது கிடையாது. நான் என்ன செய்வது, அந்த எண்ணமே எனக்கு அப்போது தோன்றவில்லையே!

ஒரு முறை விஜயா சொன்னாள் "கண்ணில் சுக்கை இழைத்துப் போட்டுக் கொண்டால் கண் நன்றாகத் தெரியும். வானத்தில் உலவும் தேவர்கள் கூட நம் கண்ணுக்குப் புலனாவார்கள்" என்று. நான் அதை முழுக்க முழுக்க நம்பினேன். ஒரு நாள் இரவு யாருக்கும் தெரியாமல் சுக்கை இழைத்துக் கண்ணில் போட்டுக்கொண்டு நான் பட்ட 'அவஸ்தை' இவ்வளவு அவ்வளவு அல்ல! அடுத்த நாள் அம்மா கேட்டார்கள் ஏன் கண் சிவந்திருக்கிறதென்று. நான் ஏதோ ஒரு 'நொண்டிச் சாக்கு'ச் சொன்னேன். இப்போது அதை நினைத்துக் கொண்டால் எனக்கு அழுவதா சிரிப்பதா என்பதே புரியவில்லை.

என்னுடைய எட்டாவது வயதில் ஊரில் உலா வந்த வைசூரி என் தாயை என்னிடமிருந்து

பிரித்துவிட்டது. "உன் அம்மா மோசம் செய்து விட்டாளடி கண்ணே" என்று என்னைக் கட்டிக்கொண்டு உறவினர் ஒப்பாரி வைத்தபோது நான் அப்படி ஒன்றும் அதிர்ச்சி அடைந்து விடவில்லை. தாய்; அது எவ்வளவு உன்னதமான ஸ்தானம்! ஒரு நாட்டிற்கு ஒரு அரசன் போனால் வேறு அரசன் வருவான்; ஒரு மந்திரி போனால் வேறு மந்திரி வருவான். ஆனால் தாய் போனால் அந்த ஸ்தானத்தில் வேறு யார் அமர முடியும்?

அப்பா ஒரு பெரிய தெய்வபக்தர். எங்கள் ஊர் 'ஆஸ்திக சிகாமணிகள் சபை'யின் தலைவரும் கூட. பட்டையாக நாமம் போட்டுக்கொண்டு 'கம கம' வென்று சந்தனம் பூசிக்கொண்டு ராமாயணம் அல்லது மகாபாரதம் படிக்க உட்கார்ந்து விட்டால் அது 'கண்கொள்ளாக் காட்சி'யாக இருக்கும். அவருடைய உச்சரிப்பில் காந்த சக்தி கலந்திருந்தது போலிருக்கிறது. இல்லாவிட்டால் 'கதை' கேட்க வருபவர்கள் மகுடி கேட்ட பாம்பு போல மயங்கிடக் காரணம் என்ன? இரவு 10 மணி அல்லது 11 மணிக்கு அப்பா பாரதம் படிக்க உட்கார்ந்துவிடுவார். படிப்பவர் தான் மட்டும் படித்தால் சுவைக்காதாம். எனவே 'உம்' என்று அப்போதைக்கப்போது கூற ஒரு ரசிகனையும் பக்கத்தில் அமர்த்திக் கொள்வார். அந்த ரசிகன் வேறு யாருமல்ல; நான்தான். அப்பா நான் ரசிக்கிறேன் என்று நினைத்துக்கொண்டு படித்துக் கொண்டே போவார். அவருடைய இனிமையான சாரீரம் என்னை அவர் கூறும் 'வியாக்கியானங்களைக் கேட்கவைப்பதற்கு மாறாகத் தூங்கப் பண்ணும். நான் தூங்கிவழிவேன்.' சில சமயங்களில் அவர் மேலே சாய்ந்து விழுவேன்!

அம்மா இறந்தபின் அப்பாவின் பூஜைக்குரிய ஏற்பாடுகளைச் செய்யும் பொறுப்பு என் தலையில் விழுந்தது. பூஜை முடிந்ததும் சிற்றுண்டி சாப்பிட்டு விட்டு அப்பா 'திண்ணைப் பேச்சு'க்குப் புறப்பட்டுவிடுவார். நாகலிங்கம் அப்பாவின் நெருங்கிய நண்பர். தினமும் காலை மாலை இரு வேளையும் வந்துவிடுவார். அப்பா அவருடன் பேச ஆரம்பித்துவிட்டால் அதற்கு முடிவே இருக்காது. பல சமயங்களில் பேச்சு சாப்பாட்டு வேளையோடு குறுக்கிடும். நான் சில சமயங்களில் குறுக்கிட்டு அவர்கள் பேச்சுக்கு முற்றுப் புள்ளி வைப்பேன். நாகலிங்கம் ஒரு பச்சை நாஸ்திகர். பரம ஆஸ்திகரான அப்பா அவருடன் எப்படி இருந்தார் என்பது எனக்கு இன்னும் புதிராகத்தானிருக்கிறது.

நாகலிங்கம் எங்களுக்கு அறிமுகமானதே ஒரு சுவைமிக்க நிகழ்ச்சி. ஒருநாள் அவர் என் தாத்தாவின் பெயரைக் கூறி அவரைப் பார்க்கவேண்டும் என்றார். அப்பா அவர் காலமாகி விட்டதாகத் தெரிவித்தார். நாக

லிங்கம் மிகவும் வருத்தப்பட்டுக் கொண்டே தான் படித்துப் பட்டதாரியான விருத்தாந்தத்தைக் கூறினார். நாகலிங்கம் ஓர் ஏழைக் குடும்பத்தைச் சேர்ந்தவராம். அவருக்கு எங்கள் தாத்தாதான் உபகாரச் சம்பளம் கொடுத்து ஊக்கப்படுத்தி B. A. வரை படிக்கச் செய்தாராம். இப்போது நல்ல நிலையை அடைந்து விட்ட நாகலிங்கம் தாதாவைக் கண்டு தன்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொண்டு அவரளித்த தொகையைத் திருப்பி அளித்துவிடவே வந்தாராம்.

அவரளிக்க வந்த தொகை ரூபாய் நாலாயிரத்தை அப்பா வேண்டாமென்று எவ்வளவு சொல்லியும் அவர் கேட்கவில்லை. அதுமுதல் நாகலிங்கம் அப்பாவின் 'அத்யந்த' நண்பரானார்!

ஆனால் நாகலிங்கத்தைப் பார்க்கும்போதே நான் வெறுப்புணர்ச்சியை வளர்த்து வந்தேன். அவரது பேச்சில் பொதிந்து கிடந்த நாத்திகமே அவரை வெறுக்கும்படி என்னைத் தூண்டிற்று. அப்பாவை ஒரு முறை கண்டித்தேன். நாகலிங்கத்தின் தொடர்பு அவருக்குத் தகாது என்று எடுத்துக் கூறினேன். ஆனால் அப்பா "சுலோ, நீ உலகமே இன்னதென்று அறியாதவள். நீ இதில் தலையிடாதே" என்றார் கடுமையான குரலில்.

அப்பா நாகலிங்கத்தோடு எப்போதும் தர்க்கம் செய்வார். அப்போதெல்லாம் நான் அவர்கள் பேச்சை ஒட்டுக் கேட்பது வழக்கம். அவர்கள் பேச்சிலிருந்து நாகலிங்கத்தின் கையே மேலோங்கி இருக்கிறதென்று அறிந்து நான் உள்ளூர வேதனைப்படுவேன். நாத்திகம் பரவினால் மக்களிடையே ஒழுக்கம் கெடுமே, ஊழல்கள் அதிகமாகுமே என்று அடிக்கடி என் மனம் சஞ்சலப்படும்.

திடீரென்று அப்பா காய்ச்சல் கண்டு படுத்த படுக்கையானார். 'ஸ்மரணை' யற்றுப் பிதற்ற ஆரம்பித்தார். அவர் நோய் அதிகமாக அதிகமாக என் வேதனை அதிகமாயிற்று. தாய் போனார் தந்தை இருக்கிறார் என்று சந்தோஷப்பட்டேன். ஆனால் இப்போது அந்த ஒரே பந்தமும் அற்றுப் போய்விட்டால் என் கதி...?

நல்ல வேளையாக எனக்குத் தினமும் வந்து நாகலிங்கம் ஒத்தாசை செய்யலானார். அது எனக்கொரு பெரும் ஆறுதலாக இருந்தது.

ஆனால் அப்பாவின் நிலைமை கவலைக்கிடமானதாக ஆகிவிட்டது. டாக்டர் உடனே ஆஸ்பத்திரியில் சேர்க்க வேண்டும் என்று கூறினார். நான் விழித்தேன். ஆனால் நிலைமையைப் புரிந்துகொண்ட நாகலிங்கம், "கவலைப்படாதீர்கள், நான் மலை போல் இருக்கும்போது உங்களுக்குக் கஷ்டம் வந்தால் பார்த்துக்கொண்டிருப்பேனா?" அவ்

வளவு நன்றி கெட்டவனல்ல நான். இன்று இந்த நிலையில் நான் இருப்பதே நீங்கள் அளித்த பிச்சைதானே" என்று எதிர்பாராதவிதமாகக் கூறினர். நான் அசந்து போனேன்!

பாசியை விலக்கின பின்பு தான் குளத்தில் நல்ல நீர் இருப்பது தெரிகிறது. நான் ஒரு அவசரக்காரி. நாகலிங்கத்தைப் பூரணமாக உணராமல் அவரைப் பற்றி என்னவெல்லாமோ கற்பனை செய்துவிட்டேன். நாகலிங்கம் நாத்திகர்தான். ஆனால் மனிதப் பண்பே அற்றவர் அல்ல!

நாகலிங்கம் தானே முன் நின்று எல்லாச் செலவையும் ஏற்ருர். அவர் மட்டும் உதவியில்லாவிட்டால் நான் என் தந்தையை மீண்டும் உயிரோடு சந்தித்திருக்க முடியுமா?

அப்பா குணமாகி வந்ததும் நான் என் நன்றியறிதலை நாகலிங்கத்திற்கு நல்ல வரவேற்பு மூலம் தெரிவித்துக்கொண்டேன். ஆனுல் அவர் வீட்டிற்கு வருவது அப்பாவிற்கு இப்போதெல்லாம் பிடிக்கவில்லை. அது அவருடைய கடுகடுத்த முகத்தின் மூலமே தெளிவாயிற்று. "அப்பா ஏன் நாகலிங்கத்தை வெறுக்கிருர்?" என்ற கேள்விச்சுதா என் மன வானில் வட்டமிட்டது. காதில் ஒரு சிறு எறும்பு புகுந்துகொண்டு விட்டால் போதும் தாங்க முடியாத வேதனையை உண்டுபண்ண. அத்தகைய சக்தி ஒரு சிறு கேள்விக்குக்கூட உண்டு என்பதை நான் அப்போதுதான் உணர்ந்தேன்.

திடீரென்று நாகலிங்கம் வேற்றூருக்கு மாற்றப்பட்டார் என்ற செய்தி வந்தது. நான் திடுக்கிட்டேன். ஆனுல் அப்பா மகிழ்ச்சி அடைந்தார். அதை அவருடைய மலர்ந்த தாமரை போன்ற முகமே காட்டிக் கொடுத்தது.

ஒருநாள் நாகலிங்கத்தினிடமிருந்து கடிதம் வந்தது. ஊருக்குப் போய் அவர் எழுதிய முதல் கடிதம் அது. அப்பா அதை வாங்கி வாசித்தார். அப்பாவின் காய்ச்சலுக்காகத்தான் செலவு செய்த ரூபாய் 2000-ஐ நாகலிங்கம் உடனடியாக அனுப்பி வைக்கும்படி கேட்டிருந்தார். இப்போதுதான் புரிந்தது அப்பா ஏன் நாகலிங்கத்தை வெறுத்தார் என்பது. அப்பா அதற்கு என்ன பதில் எழுதினரோ எனக்குத் தெரியாது. நான் அந்த விஷயத்தையே மறந்து போனேன்.

ஆனுல் திடுமென நாகலிங்கம் ஒரு ஞாயிற்றுக்கிழமை வந்துவிட்டார். முன்னறிவிப்பில்லாமல் அவர் வந்தது எனக்குத் திகைப்பை யூட்டிற்று. அவரை இன்முகத்தோடு வரவேற்று உபசரித்தேன். ஆனுல் எப்போதும் குறுநகை புரியும் அவர் முகத்தில் கோபக்கீறல்கள் காணப்பட்டன. அப்பாவிடம் அவர் வந்த செய்தியைக் கூறினேன்.

"ஓ நாகுவா, வாப்பா, என்ன விசேஷம்".

"விசேஷம் அல்ல மாசிலாமணி, விபரீதம். நீ எழுதிய கடிதம் கிடைத்தது. பட்ட கடனை நீ ஒரேயடியாகத் திருப்பிக் கொடுத்துவிட்டதாகக் கூறுவாய் என்று நான் கனவிலும் கருதவில்லை. ஆஸ்திக சிகாமணிகள் சபையின் தலைவன் என்ற ஸ்தானம் வகித்துக்கொண்டு நீ செய்யும் நம்பிக்கைத் துரோகம் எனக்குக் கொஞ்சங்கூடப் பிடிக்கவில்லை; நான் உனக்கு எந்தச் சமயத்தில் உதவி யிருக்கிறேன் என்பதை நினைவுபடுத்திக்கொள். நான் உன்னை மரணப் படுக்கையினின்று மீட்டவன். அதை மறந்துவிடாதே".

"மரணமாவது படுக்கையாவது, செப்புக் காசுகூடக் கிடையாது. போ வெளியே",

"அடபாவி... இந்தப் பகவத் கீதையின்மேல் ஆணையாகக் கூறு. எனக்குக் கொடுக்கவேண்டிய தொகையைக் கொடுத்துவிட்டதாக. நான் போய்விடுகிறேன்".

"இந்தக் கீதைமேல் ஆணையாக நான் உனக்குக் கொடுக்க வேண்டியது ஒன்றுமேயில்லை".

எதைத் தன் உயிருக்குயிராகப் போற்றி, வாழ்க்கை வழிகாட்டியாக மதித்து வந்தாரோ அதன் மேல் அப்பா ஆணையிட்டார். என் தலை சுழன்றது. நான் மயங்கி விழுந்தேன்.

மயக்கம் தெளிந்தெழுந்த போது அப்பா அறையில் மேலும் கீழுமாக நடப்பதை உணர்ந்தேன்.

"அப்பா"

"என்னம்மா, சுலோ"

"ஒன்றுமில்லையப்பா. இன்று நீங்கள் நடந்துகொண்டது மனிதப் பண்புக்கே மாறுபட்டது",

"சுலோ, நீ சிறு குழந்தை. உனக்கு ஒன்றும் தெரியாது. திருமங்கையாழ்வார்கூடத் திருட்டுத் தொழில் செய்தவர்தானம்மா". அப்பா ஆதாரம் காட்டிப் பேசினார். என் மனக்கண் முன்னால் நாகலிங்கம் தோன்றி புன்முறுவல் பூத்தார். அந்தப் புன்முறுவலுக்குப் பொருள்... யாருக்குத் தெரியும்?

3

"அம்மா, அம்மா"—என்னைப் பிடித்து உலுக்கினாள் சரோ; என் சிந்தனை கலைந்தது.

"ரெண்டுபேரும் போய்ச் சமாதானமாக அப்பா அம்மா விளையாட்டே விளையாடுங்கள். கொலு வேண்டாம். சண்டை போடக் கூடாது, கண்ணல்ல".

இமைப்பொழுதில் சரோஜா சேகர் கரங்களைப் பற்றிக் கொண்டு பட்டுப் பூச்சிபோலப் பறந்தாள். நான் ஒரு நீண்ட பெருமூச்சு விட்டேன்.

"யானைக்கால் வியாதிக்காரனுக்கு யானை பலம் இருப்பதில்லை, சுலோ" என்று யாரோ என் காதில் கூறுவது போன்றிருந்தது. சுற்றும் முற்றும் திரும்பிப் பார்த்தேன். ஒருவரையும் காணோம். என் இதழ்களினின்று ஒரு வரண்ட சிரிப்பு வெளி வந்தது. ★

—"போர்வாள்"

தென்கடல் முத்து

[பரணன்]

முத்துக்கள், பழம் பெருங் காலந்தொட்டு மனிதன் அறிந்து வைத்துள்ள கல்லொளி மணி களிலே ஒரு வகையினவாகும். அவற்றைப் போற்றிப் புகழாத மனிதனில்லை; விரும்பாத நாடில்லை; பாராட்டிப் பேசாத இலக்கிய மொழி இல்லை; அவை ஏறாத மன்னர்களின் மணி முடியில்லை!

ஆன்றோர்களாலும் சான்றோர் களாலும் சிறப்பித்துச் சொல்லப் படும் ஒன்பதுவகை மணிகளிலே முத்தும் ஒன்றாகும். முத்துக் களைப் பற்றிய குறிப்புகள் பழந் தமிழ் இலக்கியங்களிலே ஆங் காங்கு இடம்பெற்றிருக்கின்றன. வடமொழியின் பழம்பெரும் இலக்கியங்களிலும் முத்துக்கள் பலப்பட பாராட்டிச் சொல்லப் படுகின்றன. தூய வெண்மைக் கும், பல்லுக்கும் பல்லொளிக் கும், உருண்டை வடிவிற்கும் உவமை காட்டவந்த புலவர்கள் இலக்கியங்களின் பற்பல இடங் களில் முத்துக்களை உவமையாக எடுத்துக்காட்டியுள்ளனர். உல கின் பிற மொழிகளை எடுத்துக் கொண்டாலும், முத்து இலக்கி யப் புலவர்களால் போற்றிப் புகழப்படும் பொருளாகத்தான் இருந்து வந்திருக்கிறது.

திராவிடத்தின் தென்பாண் டிக் கடலில் கிடைக்கும் முத்துக் களுக்கு ஈடான எடுப்பான முத் துக்கள் உலகின் வேறு பகுதி களில் கிடையா. சீரிலும் சிறப் பிலும், புகழிலும் பெருமையி லும் பேர்பெற்றவைகள் திரா விடத்தின் முத்துக்கள் தாம். பாரசீக வளைகுடாவும், ஆசுத் திரேலியாக் கடலும் பிற முக்கிய மான முத்துக்குளிக்கும் இடங் களானாலும், அங்குக் கிடைக்கும் முத்துக்களைத் திராவிடத்தின் முத்துக்களோடு ஒப்பிட்டுப் பார்த்தால், அவை தரங்குறைந்து காணப்படுவனவாகும். முத்துக் களுக்குப் பாண்டியநாடு பேர் பெற்றது என்பதைப் புலப் படுத்தவந்த பிற்காலத்து ஔவையார் "பூழியர்கோன் தென்னாடு முத்துடைத்து" என்று சிறப்பித்துக் கூறினார். "அழகாய் முத்து குவியும் கடல் கள்" என்று திராவிடநாட்டு வாழ்த்துப் பாடலில் புரட்சிக் கவிஞர் பாரதிதாசன் அவர்கள் கூறியிருப்பதும் நோக்கத்தக்க தாகும்.

பண்டைக் காலத் தமிழக வாணிகத்தில், முத்துக்களின் ஏற்றுமதி, முக்கியமான ஒரு

இடத்தைப் பெற்றிருந்திருக்கிறது. தமிழகத்தின் முத்து வாணிகம் எகுபதியம், உரோமம், கிரேக்கம், பாரசீகம், சீனம் ஆகிய பண்டைப் பெரும் நாகரிக நாடுகளிலெல்லாம் பரவி நின்றது. அந்த நாடுகளின் சந்தைக் கூடங்களிலெல்லாம் தமிழக முத்து வாணிகர்கள் அந்த நாட்களில் செல்வச் செழிப்போடு உலாவி வந்தனர். தென்பாண்டிக் கடலில் முத்துக்கள் அரிக்கப்பட்டு, அவைகள் யவனநாடுகள் சென்று குவிந்த செய்திகளைப், பிளினி (Pliny), தாலமி (Ptolemy) போன்ற யவன ஆசிரியர்களும், 'பெரிபுளூசு' என்ற நூலை எழுதிய யவன ஆசிரியரும் தங்கள் பழம் நூல்களிலே குறிப்பிட்டுள்ளார்கள். எகுபதியத்தை ஆண்ட எழிலரசியான கிளியோபாத்திரா தன் காதலனை அந்தோனியைக் கவரவேண்டியும், அவன்மீது தான் கொண்ட காதலன்பைத் தெரிவிக்கவேண்டியும், அவன் நலத்தின் அறிகுறியாக என்று, தான் கழுத்தில் அணிந்திருந்த முத்துவடத்திலிருந்து ஒரு முத்தினை எடுத்து, அதனை நெரித்துத், திராட்சைச் சாற்றில் கலக்கி, உண்டாளாம். முத்து திராட்சைச் சாற்றில் கரையுமா என்ற ஐயப்பாடு ஒரு பக்கம் இருந்தபோதிலும், அது எவ்வளவு உயர்ந்த ஒரு பொருளாக அந்த நாட்களிலேயே மதிக்கப்பட்டு வந்திருக்கிறது என்பதற்கு இந்தச் செய்தி ஒரு எடுத்துக்காட்டாகும்; முகலாய அரசர்கள் முத்துக்களையும், முத்துச் சிப்பி ஓடுகளையும் புத்தகங்களிலும், மாளிகைகளிலும் பதிய வைத்து அழகு பார்த்து அகமகிழ்ந்தார்களாம். பண்டைக் காலந்தொட்டே தமிழர்கள் உடலுறுப்புகளில் அணியும் பல்வேறுவகை அணிகளாக முத்துக்களைப் பயன்படுத்தி வந்துள்ளனர். சிலம்பினுள் போடும் பாற்கற்களாக முத்துக்களைப் போட்டனர் என்ற செய்தி சிலப்பதிகாரத்தின் வாயிலாக அறியக் கிடக்கின்றது. சேரன் செங்குட்டுவன் வடநாட்டிலிருந்து கொண்டுவந்த வெற்றிப் பரிசுகளில் 'முத்துப் பந்தலு'ம் ஒன்றாகும். அரசன் அரண்மனைகளிலும், ஆண்டவன் கோவில்களிலும் எந்த ஒன்றை அழகுபடுத்துவதற்கும் முத்து ஒரு பெரும் பற்றுக் கோடாகப் பயன்படுத்தப்பட்டு வந்திருக்கிறது.

தென்பாண்டிக் கடலாகிய மன்னார் வளைகுடாவில் முத்துக் குளித்தல் என்பது வரலாற்றுக் காலத்துக்கு முன்புதொட்டே நடைபெற்று வருவதாகும். முத்துக்கள் பாண்டி நாட்டு மன்னர்களுக்குப் பெரும் பொருள் ஈட்டித் தந்ததோடு, வேறு யாராலும் போட்டிப் போட முடியாத அளவுக்குச் செல்வச் செழிப்பையும் செல்வாக்கையும் ஏற்படுத்தித் தந்தன. முத்துக் குளித்தல் பாண்டிய மன்னர்களுக்குரிய தனியுரிமையாக நெடுங்காலம் வரையில் இருந்து வந்தது. முத்துக் குளித்தல் தொழிலைப் பரதவர் என்னும் பெயர் படைத்

தோர், பாண்டிய மன்னர்களுக் காகச் செய்து வந்தனர். பண்டை நாட்களில் முத்துக் குளித்து முத்துக்கள் கொண்டு வந்து குவிக்கப்படும் இடம் கொற்கைத் துறைமுகமாகும். முத்துக் குளிக்கும் பரதவர்கள், பாண்டிய மன்னர்களிடம் நல்ல பல சலுகைகள் பெற்று வாழ்ந்துவந்தனர். ஐரோப்பியர்கள் வருவதற்கு முன்பிருந்தே முத்துக் குளித்தல் என்பது நல்ல அமைப்போடு அமைந்த தொழிலாக இருந்துவந்தது.

முகலாயர் படையெடுப்பிற்குப் பிறகு இஸ்லாம் பரவ, மூர் என்ற பிரிவினர்க்கும், பரதவர்களுக்கும் முத்துக் குளிப்பதில் அடிக்கடி சண்டை சச்சரவுகள் ஏற்படத் தொடங்கின. போர்த்துக்கேசியர் கொச்சியில் வந்து இறங்கித், தென்னாட்டில் ஆதிக்கம் பெறத் தொடங்கியவுடன், அவர்கள் மூர்களுக்கு எதிராகப் பரதவர் பக்கம் நின்று, பரதவர்க்குப் பாதுகாப்பு அளித்தனர். பரதவர்களில் பெரும்பாலோர் கிருத்தவர்களாக நாளடைவில் மாறினர். போர்த்துகேசியர்கள் மூர்களையும், மதுரை நாயக்க மன்னர்களையும் எதிர்த்து நின்று முத்து வாணிகத்தைத் தங்களுக்கு உரிமையுடையதாக ஆக்கிக்கொண்டனர். தென்னாட்டில் போர்த்துகேசியர் ஆதிக்கம் குலைந்து, டச்சுக்காரர் ஆதிக்கம் ஏற்பட்டவுடன், தூத்துக்குடியும் அதனைச் சேர்ந்த முத்துக்குளிக்கும் இடங்களும் கி. பி. 1658-ல் டச்சுக்காரர்களின் கைக்கு மாறின. டச்சுக்காரர்கள் பாண்டியநாட்டு அரசர்களுக்குச் சிறிதளவு காணிக்கை செலுத்திவிட்டு, முத்து வாணிகத்தை நடத்தி வந்தனர். பத்தொன்பதாம் நூற்றாண்டின் தொடக்கத்தில் ஆங்கிலேயர்கள், இந்தியத் துணைக்கண்டத்தைக் கட்டி ஆளத் தொடங்கியவுடன், முத்துக்குளித்தல் அரசாங்கத்தின் நேரடிக் கண்காணிப்பின் கீழ்க் கொண்டுவரப்பட்டது. அரசாங்கத்தால் நியமிக்கப்படும் கண்காணிப்புத் தலைவர் (Superintendent) ஒருவர், தூத்துக்குடியில் இருந்துகொண்டு, முத்துக் குளித்தலை மேற்பார்வை பார்த்து வருகிறார்.

கிளிஞ்சல்போன்று இருக்கும் முத்துச்சிப்பிகளை உடைத்து தான், உள்ளிருந்து முத்துக்களை எடுக்கின்றனர். சிப்பிப்புழு தன் மேல் ஓடுகளை, எப்படிப்பட்ட பசைநீரால் உண்டாக்குகிறதோ, அதே பசை நீரால்தான் உள்ளே முத்துக்களையும் உண்டாக்குகிறது. சிப்பிக்குள்ளே உண்டாகும் முத்து உருண்டை வடிவாகவும், பல படைகள் ஒன்றன் மீது ஒன்றாக அடுக்காக அமைந்ததாகவும் உருவாகும்; அது நீரோட்டம் வாய்ந்ததாகவும், தனியொளி வீசுவதாகவும் இருக்கும். சிப்பிப் புழுக்கள் ஆறு ஏழு ஆண்டுகாலம் வளர்ச்சியுற்ற பிறகு தான் முத்துவை உற்பத்தியாக்கும் தன்மையைப் பெறுகின்றன. அவைகள் வளர்ச்சி

யுறும் நிலைமையிலிருக்கும் போது, எந்தவகையிலும் அவைகள், அலைக்கழிக்கப்படக்கூடாது. அவைகள் நிலையாகப் பொருந்தியிருந்து வளருவதற்குக், கடினமான பாறைகள் கடலடியில் தேவைப்படுகின்றன.

நமது முன்னோர்கள், சிப்பியின் வயிற்றில் முத்து உருவாவதற்கு வியப்புக்குரிய காரணத்தைக் கூறிவந்தனர். சிப்பி கடலின் மேற்பரப்பில் வந்து நீந்தும் போது, அது வாய் திறந்திருக்க, அதன் வாயில் மழைத்துளி ஒன்று விழ, அது அதன் வயிற்றுக்குள் போக, அந்தத் துளியே நாளடைவில் முத்தாக மாறிவிடுகிறது என்று கருதிக்கொண்டனர். அந்தக் கற்பனை உண்மை யாராய்ச்சிக்கும் பொருந்தி வருவதாக இல்லை. உள்ளபடியே இயற்கையான முத்து வேறு வகையில் உருவாகின்றது. மிகச் சிறிய நுண்ணிய புழு ஒன்று சிப்பி ஓட்டுக்குள் புகும்படி நேரிட்டுவிட்டால், அது அங்குப் போனவுடன் இறந்துவிடுகிறது; இறந்த புழுவைச் சுற்றிச் சிப்பிப் புழு, ஒருவகைப் பசைநீரால் உருண்டை வடிவாகச் சுவர் எழுப்புகிறது; சிப்பிப் புழு அந்தச் சுவரைப் பெரிதாக்கிக் கொண்டே போகிறது; அது தான் முத்து என்று பெயர் பெறுகிறது. சிப்பியின் ஓட்டுக்குள் புகுவது வேறொரு புழுவாகத்தான் இருக்கவேண்டுமென்பதில்லை—வேறு எந்தப் புறம்பான பொருளான மணலோ, தூசியோ, சக்கையோ எதுவாக இருந்தாலும், அதனைச் சுற்றி உருண்டைக் கோட்டையைச் சிப்பி எழுப்பிவிடும்; அது நாளடைவில் முத்தாகக் காட்சியளிக்கும். சில சிப்பிகளில் இரண்டு மூன்றுக்கு மேற்பட்ட முத்துக்களும் இருப்பதுண்டு. சிப்பியோடுகள் எப்படிப் பல்வேறு அளவினவாகக் காட்சியளிக்கின்றனவோ, அப்படியே முத்துக்களும் பல்வேறு அளவினதாகக் காணப்படும். தூய வெண்மையும், நீரோட்டமும், பளபளப்பும் தெற்குக் கடல் முத்துக்களுக்குத் தனிச் சிறப்பை அளிப்பனவாக இருக்கின்றன.

மன்னார் வளைகுடாவில் தூத்துக்குடிக் கரையோரத்திலும் இலங்கைக் கரையோரத்திலும் முத்துக்குளிப்பு நடைபெறுகிறது. இலங்கைக் கரையோரத்தில் கடல் சிலாபம் (சிலாபத்துறை), கள்ள சிலாபம் (சியலாவ்) ஆகிய இடங்கள் முத்துக்குளிப்புக்குப் பேர்போனவை. தூத்துக்குடியிலும் இலங்கையிலும் முத்துக்குளிப்பு ஓரிரு ஆண்டுகளில் அடுத்தடுத்து நிகழ்வதாக இருக்கும். முத்துக்குளித்தலைச் சிலர் முத்துச்சலாபம் என்றும் அழைப்பர். சலம் + லாபம் = சலலாபம். அதாவது முத்து சலத்தில் (நீரில்) கிடைக்கும் லாபம் என்னும் பொருள்படும்.

தென்பாண்டித் துறைமுகத்தில் இராமேசுவரத்திலிருந்து குமரிமுனை வரையில், ஏறத்தாழ

100 மைல் தொலைவிற்குள், முத்துக் குளிக்கும் இடங்கள் அமைந்து கிடக்கின்றன. இந்தப் பகுதியை (1) வடபகுதி (2) நடுப்பகுதி (3) தென்பகுதி என்று மூன்றாகப் பகுக்கலாம். இராமேசுவரத்திலிருந்து வைப்பாறு வரையிற் வடபகுதியாகும். வைப்பாற்றிலிருந்து மணப்பாடு வரையில் நடுப்பகுதி அல்லது தூத்துக்குடிப் பகுதி எனப்படும். மணப்பாட்டிலிருந்து குமரிமுனை வரையில் தென்பகுதி என்று அழைக்கப்பெறும். இவற்றில் நடுப்பகுதியான தூத்துக்குடிப் பகுதிதான் மிக முக்கியத் தன்மை வாய்ந்தது. இங்குதான் ஏராளமான முத்துச்சிப்பிகள் அரிக்கப்படும்.

கடல் நீருக்கடியில் திட்டுத் திட்டாக அமைந்துள்ள கடினமான பாறைகளில்தான் முத்துச் சிப்பிகள் உறையும். சில பாறைகள் சில சதுக்க அடி பரப்பினவாகவும் சில பல சதுக்க மைல்கள் பரப்பினவாகவும் விளங்கும். முத்துச் சிப்பிகள் சுமார் 60 அடி ஆழத்திற்குள்தான் உறையும். மிக ஆழமான கடலுக்கடியிலேயோ, அல்லது மணலும் சேறும் தேங்கிய பகுதிகளிலோ அவை உறையா.

தூத்துக்குடியில் இப்பொழுது முத்துக்குளிக்கும் இடங்கள் தொள்ளாயிரம் பாறை, கூத்தாடியார் பாறை, வடவொன்பத்தூர் பாறை, சைதொம்பத்தூர் பாறை ஆகியவைகளாகும். தொள்ளாயிரம் பாறைதான் ஏராளமான சிப்பிகள் வாழக்கூடிய மிகப் பெரிய பகுதியாகும். அது ஏழு மைல் நீட்டமும், இரண்டு மைல் அகலமும் கொண்டது.

முத்துக்குளித்தல் ஒழுங்குபட நடைபெறுகின்றது என்றாலும், இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்பு என்ன முறையைக் கையாண்டார்களோ, அதே முறைதான் இப்பொழுதும் கையாளப்படுகிறது. முத்துக்குளிக்கும் நாட்களில் தூத்துக்குடிப் பகுதி வணிகர்களாலும், படகு உரிமையாளர்களாலும், முத்துக்குளிப்போராலும், வேடிக்கைப் பார்ப்போராலும் நிறையப் பெற்றிருப்பதில் வியப்பில்லை. 28 ஆண்டுகளுக்கு முன்பு 1927-ல் முத்துக்குளிப்பு தென்பாண்டிக் கடலில் நடைபெற்றது; இப்பொழுது 1955-ல் மீண்டும் நடைபெறுகின்றது.

திராவிடத்தின் ஒப்புயர்வற்ற செல்வங்களில் முத்து முக்கியமான ஒன்றாகும். இவ்வாண்டு மட்டும் மூன்று கோடி முத்துச் சிப்பிகள் அரிக்கப்படக்கூடும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. எதிர்பார்க்கும் பலன் கிட்டாது என்றும் கருதப்படுகிறது. காரணம் பல சிப்பிகளில் முத்துக்கள் சரியானபடி உருவாகவில்லை என்று கூறப்படுகின்றது. முத்துக்களே இல்லாமலும், அரையும் குறையுமாகவும் அமைந்த சிப்பிகள் பலவாக இருக்கின்றன என்று தெரிவிக்கப்படுகின்றது. முத்துச்சிப்பியைப் பற்றிய நல்ல ஆராய்ச்சிகளை நடத்தி, ஏராள

மான முத்துக்களை உற்பத்தியாக்கும் வழி வகைகளைக் கண்டால், அதனால் திராவிடம் எவ்வளவோ செல்வவளம் மிக்கதாக விளங்கலாம்.

அகில உலகச் சந்தைகள் அத்தனையையும் பிடிக்கக்கூடிய ஒரு பெரும் பொருள்தான் முத்து. அதனை ஏராளமாக உற்பத்தியாக்கி, அவைகளை உலகச் சந்தைகளுக்கு அனுப்பி வைத்தால், அவைகள் டாலர்—பவுன்—உரூபில் ஆகியவற்றைப் பெரும் அளவில் ஈட்டித் தரும். திராவிடத்தின் அரும்பெருஞ் செல்வமான முத்துக்களைப் பேணி வளர்ப்போமாக! பிளினியின் காலத்திற்கு முன்புதொட்டு உலகச் சந்தைகளில் பெரும்புகழ் எய்திவரும் தென்கடல் முத்து மீண்டும் மிகப் பெரும் புகழ் எய்துமாக!

[இது தோழர் டி. எச். தண்டபாணி அவர்கள் எழுதிய "இந்தியாவின் முத்துக் குளிப்புகள்" என்ற ஆங்கிலக் கட்டுரையைத் தழுவி எழுதப்பட்டதாகும்.] ★

—"மன்றம்"

"ஆரம்பக் கல்வி ஆபீஸ்"

❊

94-95, புதுத்தெரு, மண்ணடி, சென்னை–1.

❊

மாதாந்திரக் கணக்கு அனுப்பும் பாரங்கள் (ஆங்கிலம்) 100 ரூ. 2–8

ரிகார்ட் ஷீட்டுகள் (ஆங்கிலம்) 100 ரூ. 2–0

பிராவிடண்ட் பண்டு கட்டும் பாரங்கள் (ஆங்கிலம்) 100 ரூ. 2–0

பள்ளியில் பிள்ளைகளைச் சேர்க்கும் விண்ணப்பத் தாள்கள் (ஆங்கிலம்) 100 ரூ. 1–0

வருடாந்திர பிராவிடண்ட் பண்டு சரிபார்த்தனுப்பும் பாரங்கள் (ஆங்கிலம்) 100 ரூ. 2–0

Form of Certificate of Income. வருமான நற் சாட்சிப் பாரங்கள் (ஆங்கிலம்) 100 ரூ. 2–0

(தபால் செலவு உட்பட)

❊

ஒவ்வொன்றிலும் 25 பாரங்களுக்குக் குறையாமல் முன் பணத்துடன் 'ஆர்டர்' அனுப்பவும்.

கக்குவான் இருமல்

[ஜே. எப். எட்வர்ட்ஸ், எம். டி.]

கக்குவான் இருமல் தொற்று கிறதும், குழந்தைகளுக்கு மிகவும் ஆபத்தானதுமான ஒரு நோய். அதின் அகோரத்தையும், அது வந்துவிட்டால் குழந்தைகள் படும் கஷ்டத்தையும் சொல்ல முடிவதேயில்லை. மிகவும் தீவிரமாக ஒரு குழந்தையிடமிருந்து மறு குழந்தைக்கு இப்படித் தொற்றிக் கொண்டே போவதும், குழந்தைகளை வதைத்து விட்டுச் சற்றேனும் இரக்கமில்லாதபடி இளம்பிள்ளைகளின் பெருவாரியான மரணங்களுக்கு அடிகோலுவதுமான வியாதிகளில் அதுவும் ஒன்று. நேற்று சாதாரணமாக விளையாடிக்கொண்டிருந்த பிள்ளைகளுக்குச் சளி சற்றே பிடிக்கிறது. சாதாரணமான சளியும் இருமலும் தானே என்று சொல்லிக் கொண்டு, நாம் நிர்விசாரமாக இருந்து விடுகிறோம்.

இது தொற்றிய முதல் இரு வாரங்களுக்குச் சாதாரண சளி அல்லது இருமல் போலிருந்து, பிறகு கக்குவான் ஆரம்பிக்கிறது. மறு வாரம் இருமல் மிகக் கடுமையாகின்றது. தொடர்ந்து குழந்தை இருமுகிறான். இருமி, இருமி, முகம் வெளிறி, மார்பு யொட்டிப் போவது போலாகிறது. நன்றாக இருமிய பிறகே மூச்சை மெதுவாக உள்ளிழுக்கிறான். அப்பொழுது கர்கர் என்ற சத்தம் பலமாக உண்டாகிறது. இதையே கக்குவான் என்று கூறுகிறோம். சில குழந்தைகளுக்கு இந்நோய் வந்தாலும், மூச்சை உள்ளிழுக்கும் போது, இத்தகைய சப்தம் உண்டாவதில்லை. சில குழந்தைகளுக்கு ஒரு நாளைக்கு மூன்று முதல் ஐந்து தடவைகள் வரை, அநேக குழந்தைகளுக்குப் பல தடவைகளிலும் இவ்வாறு இருமல் சற்று ஓய்ந்து, மூச்சை உள் இழுத்து, ஒவ்வொரு தரமும் சுவாசிக்க அவசியமாகிறது. கக்குவான் இருமல் மிகவும் தொல்லைப் படுத்துவது. வேண்டாத விருந்தாளியைக் கூட இலகுவில் போக்கி விடலாம். இது வந்து விட்ட பின் ஒரு மாதம் முதல் மூன்று மாதங்கள் வரை என்னென்ன பகீரதப் பிரயத்தனங்களினாலும் மனித உடலை விட்டுக் கிளப்பி விட முடிவதில்லை. அதற்கப்புறம் சிகிச்சையின் பயனாக அது குடி பெயர்ந்தாலும் தற்காலத்தில் பட்டணங்களில் குடிக்கூலிக்கு இருக்கிறவர்கள் நிர்ப்பந்தத்தினால் வெளியேற்றப்படும் பொழுது, தங்களை விடப் போக்கிரியும் மூர்க்கனுமான ஒரு

லனக் குடியேற்றி விட்டு வெளியேறுவது போல, தன்னிலும் மிகத் திறமை வாய்ந்த ஆட்கொல்லியாகிய நியுமோனியா க்ஷயரோகம் இவற்றுள் ஒன்றைக் கொண்டு வந்து குடி வைத்து விட்டுப் போகின்றது. இவை மாணத்தை விளைவிக்கின்றன. கக்குவான் இருமலுக்கு ஏற்கனவே இலக்காகியிருப்பதால், தன்னைத் தாக்கும் இவ்வகை கொடிய நோயை எதிர்க்கும் சக்தி உடலுக்கு இல்லாதிருக்கின்றது. இவ்வாறு ஒவ்வொரு நாட்டிலும் ஒவ்வொரு வருடமும் பல ஆயிரக் கணக்கான குழந்தைகள் வேறு நோய்களுக்குப் பலியாவதற்குக் கக்குவான் காரணமாகின்றது. குறிப்பாக கக்குவான் வந்ததற்கப்புரம் நிமோனியா தொற்றியே குழந்தைகள் பலியாகின்றன.

இந்நோய் வந்த மூன்றும் வார முதல் குழந்தை அடிக்கடி இருமி, கக்குகிறான். இதின் விளைவாக தேவையான உணவும் நீரும் உட்கொள்ள முடிவதில்லை. சில தினங்களில் உடல் மிகவும் பலவீனம் அடைந்து விடுவதால், பிற நோய்கள் நாளடைவில் தொற்றுவதற்கு இடமாகிறது. ஆகவே இது வராதபடி முன்னதாகவே தடுப்பு மருந்து கொடுத்து, குழந்தைகளைப் பாது காப்பது மிகவும் உசிதம். தடுப்பு ஊசி குத்திய பிறகும் சில குழந்தைகளுக்கு வருவதுண்டு. அப்படி வந்து விட்டாலும் எளிதில் குணமாகி விடும். கஷ்டப்படுவதுமில்லை.

அண்டை அயல் வீட்டுக் குழந்தைகளிடமிருந்து இது பொதுவாகத் தொற்றுமாதலால், உங்கள் குழந்தைகளுக்கு இது அப்படித் தொற்றி விடாதபடி கவனித்து வாருங்கள். கக்குவான் இருக்குமிடங்களுக்கு, வீடுகளுக்கு குழந்தைகளை அழைத்துச் செல்ல வேண்டாம். சாதாரணமான சளி, இருமல் போன்று காணப்படும் பொழுது தான் கக்குவான் அதிக தீவிரமாகத் தொற்றும் தன்மை வாய்ந்தது. அது இருப்பதைக் கண்டு பிடிப்பதும் இலகுவில் சாத்தியமல்ல. முதலில் சாதாரணமான சளி, இருமல் என்ற போர்வைக்குள்ளாகவே இது மறைந்து கொண்டு, அப்புறம் விசுவரூபம் எடுத்துக் குழந்தைகளை ஆட்டி வைப்பதால், சட்டென்று இது ஒளிந்து கொண்டிருப்பதைக் கண்டு பிடித்துச் சொல்லவே முடியாது. தேர்ந்த வைத்தியராலேயே அது கூடும்.

கக்குவான் இருமல் அதிக அகோரமாக இருந்தாலொழிய, மற்றப்படி படுக்கையில் தான் இருக்க வேண்டுமெனக் குழந்தையைக் கட்டாயப் படுத்தக் கூடாது. வீட்டினுள் அல்லது பிறருக்குத் தொற்றாதபடிக்கு ஓரிடத்தில் சூரிய வெளிச்சம் நன்றாக இருக்குமிடத்தில் விளையாடிக் கொண்டிருக்கட்டும். அவன் வீட்டிற்கு வெளியே மைதானத்திற்குப் போய் தனியாக நின்று விளையாட விரும்பினால், கம்பளித் துணி வேண்டு

மென்பதில்லை. நல்ல முரட்டுத் துணி யணிந்து, வெளியே போக அனுமதியுங்கள். இலேசான ஆடையணிந்து போவதால் சளி பிடித்து, நியுமோனியா ஜுரம் வந்து விடாதபடி அவனைப் பாது காத்துவர வேண்டும்.

கக்குவான் இருக்கும் குழந்தையைப் போஷிப்பது ஒரு தனிக் கலை போன்றது. சத்துள்ள, ஆனால் இலகுவில் ஜீரண மாகிற உணவே அவனுக்குக் கொடுக்கப்பட வேண்டும். பால், முட்டை சேர்ந்த பணிகாரங் களும், சில தானிய வகைகளும் காய்கறிகளும் மட்டுமே கொடுத்து வாருங்கள். வேளா வேளைகளில் சிறுகச் சிறுக உண வூட்டுங்கள்; ஒரே காலத்தில் ஏகப்பட்ட உணவு கொடுக்க வேண்டாம். பழ ரசம், குறிப் பாக ஆரஞ்சு ரசம் இலகுவில் ஜீரணமாவதுடன், சத்து மிகுந் ததுமாகும். சாப்பிட்டவுடனே ஒரு குழந்தை இருமி உணவை யும் சேர்த்து கக்கி விட்டால், அவனுக்கு மறுபடியும் உணவு கொடுக்க வேண்டும். ஏனெனில் அஜீரணத்தினலோ, வயிற்றுக் கோளாறின் விளைவாகவோ அவன் வாந்தியெடுக்கவில்லையே. உணவை இளஞ் சூடாகவே கொடுக்க வேண்டும். குளிர்ந்த பதார்த்தங்களை கொடுக்கவே கூடாது.

சின்னஞ்சிறு குழந்தைகள் இருமும் பொழுது ஏற்படும் உடற் குலுக்கத்தினல், அதிக மாகப் பாதிக்கப்படாமலிருக்க இடுப்பைச் சுற்றிலும் வயிற்றை யொட்டி அகலமாக எலாஸ்டிக் அல்லது சுற்றுத் துணி உபயோ கித்து, தளர்த்திக் கட்டி விட லாம்.

குழந்தையின் உடலில் எதிர்ப்பு சக்தியை உண்டு பண் ணும் எதையும் செய்ய வேண் டியதே. இரவிலும் பிற் பகலி லும் போதுமான அளவு நேரம் தூங்குவதற்கென்று ஒதுக்க வேண்டும். மீனெண்ணெய் குடிப்பது அவனுக்கு வாந்தியை உண்டு பண்ணுமென்றால், அதைக் கொடுத்து வாருங்கள். அநேக மீனெண்ணெயில் சத்து கள் மிகக் குறைவாகவும் சிலவற் றுள் மிக அதிகமாகவும் இருக் கின்றன. டாக்டர் ஆலோசனை யின் படியே கொடுக்க வேண் டும். மிகக் குறைவான அளவி லும் அதிகமான அளவிலும் மீனெண்ணெயை உள்ளே கொடுப்பது ஆபத்து. கக்குவான் இருக்கும்போது யாவும் மட்டா கவே கொடுத்து வர வேண்டும்.

தண்ணீரைக் கொதிக்க வைத்து, நீராவியாக்கி, நீரில் ஏதாவது ஒரு மருந்தைச் சேர்த்து முகர்ந்து பார்க்கலாம். டாக்டரிடம் கேட்டு இதைச் செய்வதே நன்மை. இருமலின் அகோரத்தைக் குறைப்பதற்கு மருந்து கொடுப்பதற்கு டாக் டரால் கூடும். அகோரமான கக்குவான் இருமலினல் மூளை, கண்கள் இவற்றில் இரத்தப் பெருக்கு ஏற்பட்டு, குழந்தை யின் உடல் நிலை க்ஷீண தசையை

அடையலாம். ஆகவே நல்ல வைத்தியரிடம் சிகிச்சை பெறுவது அவசியமே. கடைகளில் சாதாரணமாக வாங்கக் கூடிய இருமல் மருந்துகளினால் உபயோகம் ஒன்றும் இராது. அவற்றினால் தீமை விளைவது கூடியதே.

ஆறு வாரங்கள் குழந்தையைத் தனிப்பட வைத்துக் கவனித்து வர வேண்டும். அதற்கு மேலும் இருமல் இருந்து வந்தால், உடனே பூரண தேக பரிசோதனை செய்து, இருமலை நிறுத்த முற்பட வேண்டும். நுரையீரல் அல்லது இருதயம் கக்குவான் இருமலினால் பாதிக்கப்பட்டுள்ளதா எனக் கண்டு பிடிப்பது அவசியம். ஐந்து வயதுக்குட்பட்ட குழந்தைகளுக்கு இது வருவது மோசம். ஒரு வயதுக்குட்பட்ட குழந்தையெனில் மிகவும் கவனமாக அதை பாதுகாத்து வரவேண்டும். சரியான வைத்தியரின் உதவியின்றி எதையும் செய்வதற்கு முற்படாதிருங்கள். குழந்தைப் பிராயத்தின் மிகவும் கொடிய சத்துரு இந்தக் கக்குவான் இருமல் நோய் என்பதை மறந்து விடாதிருங்கள். ★

—"நல்வழி"

அறிவுக் கதிர்

1. சமூக வாழ்க்கையிலிருந்துதான் அரசியல் நிறுவனங்கள் வளர வேண்டும். சமூக அபிப்பிராயங்களும் இலட்சியங்களுமே அவைகளை உருவாக்குகின்றன. —"சுபாஷ் சந்தர போஸ்"

2. பல் வலி உள்ளவன் பல்வலி இல்லாதவனை சுகவாசி என நினைக்கிறான். இதே கதிதான் பணக்காரனைப்பற்றி ஏழை நினைப்பதும். —"பெர்னாட்ஷா"

3. மீனை விரும்பாத பூனை கிடையாது. பொன்னை விரும்பாத பெண்மணி கிடையாது. —"தாமஸ் கிரே"

4. காதல், முடிச்சுப் போட்டுக் கொள்ளும்போது, மற்ற கட்டுகளை யெல்லாம் தகர்த்தெறிந்து விடுகிறது. —கெதே.

5. வாழ்க்கை என்பது உணர்ச்சி மிக்கவர்களுக்குக் கலையாகத் தெரிகிறது. அறிவு மிக்கவர்களுக்குத் தத்துவமாகத் தெரிகிறது. —"யாரோ"

6. பெண்ணுக்கு நாணம், மலருக்கு மணம்போல! —"கிரிகிரி"

7. முதலில் உன்னை அடக்கியாளப் பழகு; பிறகு உன் மனைவியைச் சுலபமாக அடக்கியாள முடியும். —"புல்வர்"

உங்களுக்குத் தெரியுமா? (இந்தியாவில்)

[By M. J. L. ஞானையா ஆசிரியர், பிள்ளைகுளம்]

1. இந்தியாவில் 1953—54-ம் வருடத்தில் உணவு தானிய சாகுபடி விஸ்தீரணம் மொத்தம் 26·1 கோடி ஏக்கராவுக்கு அதிக மாகும். இந்த உச்ச அளவை இந்தியா இதற்குமுன் அடைந்ததில்லை.

2. இந்திய தபால் போக்குவரத்து மார்க்கங்களில் சுமார் 1,86,961 மைல் சர்வீஸ் மார்க்கங்கள். சுமார் 20,486 மைல் விமான மார்க்கங்கள்.

3. இந்தியாவிலுள்ள நிலக்கரி சுரங்கங்களில் நிலக்கரி உற் பத்தி 1954-ம் வருடம் ஆகஸ்டு மாதத்தில் சுமார் 29,57,619 டன் ஞக இருந்தது. 1954 செப்டம்பரில் 31,71,404 டன்ஞக அதி கரித்திருக்கிறது.

4. 1954 ஆகஸ்டு மாதத்தில் இந்திய ரயில்வேக்களுக்கு இந்தியாவிலும், வெளிநாடுகளிலும் உள்ள உற்பத்தியாளர்களிட மிருந்து உச்ச அளவு வாகனங்கள் 2,127 வாகனங்கள் சப்ளையாயின.

5. மத்திய சமூக சேமாபிவிருத்தி போட நடப்பு வருடத் தில் மொத்தம் 129 சமூக சேமபிவிருத்தித் திட்டங்களைத் துவக்கி யுள்ளது. முதலாவது ஐந்தாண்டு திட்டத்தில் இதற்கு நிர்ணயிக் கப்பட்டுள்ள இலட்சிய அளவு 352 ஆகும்.

6. நாட்டில் போக்குவரத்து வாகனங்கள் செல்ல இயலாத பிரதேசங்களில் தபால் தந்தி இலாகாவைச் சேர்ந்த மொத்தம் 1,04,231 அஞ்சலோடிகள் தபால்களைப் பட்டுவாடா செய்து வரு கின்றார்கள்.

7. இந்தியாவில் எரிசாராய உற்பத்தி 1950—51-ல் 47.2 இலட்சம் காலஞக இருந்தது. 1953—54-ல் மொத்தம் 88 இலட் சம் காலஞக அதிகரித்திருக்கிறது.

8. புதிய விமான நிலையங்களையும், விமானம் இறங்கும் பாதை களையும் நிர்ணயிப்பதற்காக 5 ஆண்டு திட்டத்தின்கீழ் இதுவரை மொத்தம் 15·58 இலட்சம் ரூபாய் செலவழிக்கப்பட்டிருக்கிறது.

9. வெட்டுக்கிளி ஒழிப்பு நடவடிக்கைகளுக்காக இந்திய சர்க்கார் 1953–54-ல் சுமார் 21 இலட்சம் ரூபாய செலவு செய்தனர்.

10. 1954-ம் வருடத்தின் முதல் ஒன்பது மாதத்தில் இந்தி யாவிலிருந்து மொத்தம் 33,841 குரங்குகள் வெளிநாட்டுக்கு ஏற்று மதியாயின. அவை ஒவ்வொன்றுக்கும் 10 ரூ. வீதம் விலை கிடைத்தது.

11. 1953 அக்டோபர் மீ-லிருந்து 1954 மார்ச் மீ வரை யுள்ள காலத்தில் மத்திய சர்க்கார் தேசீய விஸ்தரிப்பு திட்டத்தின் கீழ் சமூக கல்விக்காக மொத்தம் 2,41,080 ரூபாய் செலவழித்திருக் கிறார்கள்.

12. சமுதாய ஆபிவிருத்தித் திட்டப் பிரதேசங்களில் பொது மக்களின் இஷ்டப்பூர்வ நன்கொடைகளின் உதவியுடன் 1954–ம் ஞூ செப்டம்பர் 30உ வரையில் மொத்தம் 9,025 மைல் தூரத்துக்கு கச்சா ரஸ்தாக்களும், 75·7 மைல் தூரத்துக்குப் பக்கா ரஸ்தாக்களும் நிர்மாணிக்கப்பட்டன. தேசிய விஸ்தரிப்பு சர்விஸ் தொகுதிகளில் கச்சா ரஸ்தாக்கள் 2,716 மைல் தூரத்துக்கும், பக்கா ரஸ்தாக்கள் 294 மைல் தூரத்துக்கும் நிர்மாணிக்கப்பட்டிருக்கின்றன.

13. நாட்டில் ஏற்பட்டிருந்த சர்க்கரைத் தட்டுப்பாட்டை சமாளிக்கும் பொருட்டு வெளிநாடுகளிலிருந்து சர்க்கரை ஏராளமாக இறக்குமதி செய்யப்பட்டது காரணமாக 1954–ம் ஞூ–ல் சர்க்கரைமீது இறக்குமதியின் மூலம் மொத்தம் 10·82 கோடி ரூபாய் கிடைத்தது. 1953–ல் இவ்வகையில் வசூலிக்கப்பட்ட தொகை மொத்தம் 3·73 கோடி ரூபாயாம்.

சென்னை மாகாணத்திலுள்ள ஜில்லாக்களின் மொத்த ஜனத் தொகையும், அதில் படித்தவர், படித்தவர்களின் விகிதமும்.

	ஜில்லா	ஜனத் தொகை	படித்தவர்	படித் தவர்% விகிதம்
1.	சித்தூர்	18,10,337	2,25,810	12·5
1.	சென்னை	14,16,056	6,02,490	42.5
2.	செங்கற்பட்டு	18,53,619	3,38,800	18·3
3.	தென் ஆற்காடு	27,76,767	4,84,730	17·5
4	தஞ்சாவூர்	29,82,690	7,16,555	24·0
5,	மதுரை	28,91,817	6,03,350	20·9
6.	இராமநாதபுரம்	20,80,519	4,41,440	21·2
7.	திருநெல்வேலி	24,45,967	6,27,110	25·6
8.	வட ஆற்காடு	28,59,157	5,19,190	18·2
9.	சேலம்	33,71,769	3,82,850	11·2
10,	திருச்சி	29,43,882	5,60,950	19·1
11.	கோயமுத்தூர்	32,93,204	5,77,440	17·5
12.	நீலகிரி	3,11,792	57,790	18·5
13.	மலையாளம்	47,58,342	14,89,490	31·3
14.	தெ. கன்னடம்	17,48,991	4,09,740	23·4
	மொத்தம்	3,57,34,489	78,11,820	21·9

சென்னை மாநில எயிடட் ஆரம்பப்பள்ளி, மானேஜர்கள், ஆசிரிய மானேஜர்கள் இரண்டாவது மாநாடு

வட ஆற்காடு, வேலூர், லட்சுமணசாமி முதலியார், டவுன் ஹால்

19–11–55 சனிக்கிழமை காலை 10–30 மணிக்கு

மாகாண சங்கத்தின் தலைவர் அறிக்கை

இவ்வாண்டு 27–3–55–ல் சென்னையில் முதல் மாநாடு டாக்டர் பி. வரதராஜுலு நாயுடு அவர்கள் தலைமையில் சிறப்பாக நடத்தப் பட்டது. அம்மாநாடு, அளகப்ப செட்டியார் தலைமையில் ஏற்படுத் தப்பட்ட கல்விக் கமிட்டியாருக்கு, எயிடட் பள்ளிகளின் மானேஜர் கள் அபிப்பிராயத்தைத் தெரிவிக்கவே கூட்டப்பட்டது. ஆனால் அந்தக் கமிட்டியார் இப்பொழுது எயிடட் பள்ளிகளின் முன் னேற்றத்திற்கு, நாட்டில் ஆரம்பக்கல்வி வளர்ச்சிக்கு, முட்டுக் கட்டையாக தமது அறிக்கையில் சில கருத்துக்களை வெளியிட்டிருக் கின்றனர். அதில் குறிப்பாக,

1. எயிடட் ஆரம்பப் பள்ளிகள், இனி ஓர் கமிட்டியை அமைத்து நிர்வகிக்க வேண்டுமென்றும், அந்தக் கமிட்டியில் பொது மக்களில் சிலரையும், அரசாங்கம் நியமிக்கும் சிலரையும், அந்தக் கமிட்டியில் வைத்துக்கொள்ள வேண்டுமென்றும், இனி எயிடட் பள்ளிகள் கமிட்டியின் மூலம்தான் நடத்தப்படவேண்டுமென்றும்,

2. இனி எயிடட் பள்ளிகளில் சம்பளம் வசூலிக்கக் கூடா தென்றும், அதற்கான நஷ்டஈடு நாளாவட்டத்தில் அரசாங்கம் கொடுக்கக் கூடாதென்றும் குறிப்பிட்டிருக்கிறது.

3. இக்கருத்துக்களை எதிர்க்க வேண்டியது ஒரு புறமிருக்க, மே மாதத்தில் வெளியிட்ட G. O. No. 926–ல் எயிடட் பள்ளி களில் படிக்கும் பிள்ளைகளுக்கு முழு நஷ்டஈடு கொடுப்பதாக வாக்குறுதி கொடுத்துவிட்டு, செப்டம்பர் மாதத்தில் பிள்ளைகளுக்கு, 3 அணு, 4 அணு விதம் கொடுப்பதாக அரசாங்கம் தெரிவித்திருக் கிறது. இதை எதிர்த்து மாகாண சங்கத்தின் நிர்வாகிகள் கல்வி மந்திரியிடத்திலும், கல்விஇலாகா டைரக்டரிடத்திலும், தூது கோஷ் டியின் மூலமும், மனுக்களின் மூலமும் தெரிவித்து, முழு நஷ்ட

ஈட்டைக் கொடுக்கும்படி கடந்த இரண்டு மாதங்களாக போராடிக் கொண்டிருக்கிறது. இந்தப் போராட்டத்தின் காரணமாக டைரக்டர் அவர்கள் செப்டம்பர் உத்தரவை புனராலோசனை செய்வதாக வாக்களித்திருக்கிருர். மாதங்கள் 6 ஆகியும் பாடசாலைகளுக்குப் பணம் கிடைக்காமல், பாடசாலைகளுக்கு வாடகை கொடுக்க முடியாமல், மற்ற செலவுகளுக்காக கடன்பட்டுப் பல தொல்லைகளில் ஆழ்ந்து அவதிப்பட்டுக் கொண்டிருக்கிறது எய்டட் பாடசாலைகள். இந்த சிக்கலான சூழ்நிலையில் இனி மாகாண சங்கம் எத்தகைய நடவடிக்கையில் ஈடுபடவேண்டுமென்பதை, எயிடட் பாடசாலைகளுக்கு ஏற்பட்டுள்ள ஆபத்திலிருந்து எப்படி தப்பிவிப்பது என்பதையும் ஆராய்வதற்காகவே இந்த இரண்டாவது மாநாடு வட ஆற்காடு ஜில்லாவிலுள்ள வேலூர் நகரத்தில் 19–11–55 ல் நடத்த வட ஆற்காடு ஜில்லா மானேஜர்கள் சங்கம் ஏற்பாடு செய்திருக்கிறது.

ஆதலின் இந்த அறிக்கையைக் கண்டதும் ஒவ்வொரு ஜில்லாவிலிருந்தும் குறைந்தது தாலூக்காவிற்கு 4 அங்கத்தினர்களாக 25 அங்கத்தினர்களுக்குக் குறையாமல் இம்மாநாட்டில் கலந்து கொள்ள வேண்டியது. இந்த மாநாட்டிற்கு டாக்டர் பி. வரதராஜுலு நாயுடு M. L. A. தலைமை தாங்குகிருர். இன்னும் பல M. L. A-க்கள் இம்மாநாட்டில் கலந்து கொள்வதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருகிறது. இம்மாநாட்டின் வரவேற்புக் கமிட்டித் தலைவர், மற்ற நிர்வாகிகளின் விலாசங்கள் கீழே கொடுக்கப்பட்டிருக்கின்றன. மாநாடு 19–11–55 சனிக்கிழமை காலை துவக்கப்படுகிறது. காலமோ மிகக் குறுகிய காலம். வரவேற்புக் கமிட்டியார் எல்லா எயிடட் பாடசாலைகளுக்கும் அழைப்புத்தான் அனுப்பி வைப்பதற்கு போதிய காலம் கிடையாது. நாதா பத்திரிகையில் வரவேற்புக் கமிட்டியார் விடுத்துள்ள அறிக்கையை அழைப்பிதழாக வைத்துக் கொண்டு மானேஜர்கள் பெருவாரியாக இம்மாநாட்டிற்கு பொருள் கஷ்டத்தையும் உடல் சிரமத்தையும் பாராமல் மாநாட்டில் கலந்துகொள்ள வேண்டுகிறோம். இம்மாநாடு எயிடட் பாடசாலைகளின் எதிர் காலத்தை நிர்ணயிக்கும் மாநாடாகும்.

பொதுக் காரியதரிசி	பி. வீரராகவன்
ஏ. ஆர். சேஷாசலம்	தலைவர்

வரவேற்புக் கமிட்டி அறிக்கை

...டுர்காண சங்கத்தின் தலைவரும், காரியதரிசியும் கொடுத்துள்ள அறிக்கையின்படி, மாநில மானேஜர்கள் இரண்டாவது மாநாடு 19-11-55 சனிக்கிழமை காலை 10-30 மணிக்கு வட ஆற்காடு ஜில்லா வேலூர் திரு. வி. லட்சுமணசாமி முதலியார் டவுன் ஹாலில் கூட்ட வரவேற்புக் கமிட்டியார் ஏற்பாடு செய்திருக்கின்றனர்.

மானேஜர்கள், ஆசிரிய மானேஜர்கள் சங்கங்கள் அமைக்கப் பட்டிருக்கும் ஜில்லாக்களில் மாநாட்டிற்குத் தாலுக்கா வாரியாக குறைந்தது நான்கு பிரதிநிதிகளை, மாநாட்டின் பிரதிநிதிகளாக தேர்ந்தெடுத்து அனுப்பக் கேட்டுக்கொள்கிறோம். தாலுக்கா வாரியாக ஆசிரிய மானேஜர்கள் சங்கங்கள், மானேஜர்கள் சங்கங்கள் இல்லாத இடங்களில் தனிப்பட்ட (Mission, Nonmission) பாடசாலை மானேஜர்களும் மாநாட்டிற்குப் பிரதிநிதிகளாக அல்லது வரவேற்புக் கமிட்டி அங்கத்தினர்களாகக் கலந்து கொள்ளலாம்.

வரவேற்புக் கமிட்டி அங்கத்தினர்களுக்குக் கட்டணம் ரூபாய் 2

சாதாரண பிரதிநிதிக் கட்டணம் ரூபாய் 1.

இந்தத் தொகையை நவம்பர் மாதம் 16 ஆம் தேதிக்குள் கீழ்க்கண்ட விலாசத்திற்கு M. O. மூலம் அனுப்பி வைக்கவும்.

பிரதிநிதிகளும் வரவேற்புக் கமிட்டி அங்கத்தினர்களும் நவம்பர் 18-ஆம் தேதி வெள்ளிக்கிழமை மாலை 6 மணிக்குள் வேலூர் வந்து சேர்ந்துவிடவேண்டும். டெலிகேட்டுகள் வேலூரில் தங்க வசதி செய்யப்பட்டிருக்கிறது. வெள்ளி இரவு (18-5-55) 9 மணிக்கு லட்சுமணசாமி ஹாலில் விஷயாலோசனைக் கமிட்டி கூடும். அந்தக் கமிட்டியில் மாநாட்டிற்குக் கொண்டுவரப்படும் தீர்மானங்களைக் குறித்து விவாதிக்கப்படும். ஆதலால் பிரதிநிதிகள், தாங்கள் மாநாட்டிற்குக் கொண்டுவர இருக்கும் தீர்மானங்களை 16-11-55 (வெள்ளிக்கிழமைக்)குள் வேலூரில் சேரும்படி கீழ்க்கண்ட விலாசத்திற்கு அனுப்பி வைக்கவும்.

இந்த மாநாட்டில் கிருத்துவ மிஷனரிகளால் (Catholic or Protestant) அல்லது கமிட்டிகளால் நடத்தப்படும், எல்லாவித ஆரம்பப் பாடசாலை மானேஜர்களும், நிர்வாகிகளும் கலந்துகொள்ளலாம்.

இந்த மாநாடு சிறப்பாக நடைபெறுவதற்கு, பண வசதியுள்ள மானேஜர்கள் தங்களுக்கு இஷ்டப்படியான நன்கொடை அனுப்பலாம்.

பெருவாரியாக மானேஜர்கள் இம் மாநாட்டில் கலந்துகொண்டு வெற்றிகரமாக மாநாட்டை நடத்தி வைக்கும்படி கேட்டுக்கொள்ளுகிறோம்.

மாநாட்டிற்கு குறுகிய காலம் இருப்பதால், இந்த பத்திரிகையின் விளம்பரத்தையே மாநாட்டின் அழைப்பாக வைத்துக்கொண்டு, மாநாட்டில் பெருவாரியாகக் கலந்துகொள்ளவும்.

S. இராமானுஜய்யா, மானேஜர்
எயிடட் ஹையர் எலி. பாடசாலை,
சைதாபேட்டை, வேலூர், N. A. Dt.
(மாநாட்டின் வரவேற்புக் கமிட்டித் தலைவர்)

R. மகாதேவய்யர், மானேஜர்,
இராமலிங்கம் எயிடட் உயர்தர ஆரம்பப் பாடசாலை
முத்துப்பிள்ளைத் தெரு, வேலூர், N. A. Dt.
(மாநாட்டின் காரியதரிசி)

S. புண்ணியக்கோட்டி முதலியார்,
காரஸ்பாண்டென்ட்
நேஷனல் உயர்தர ஆரம்பப் பாடசாலை,
சீதாராம முதலி தெரு, வேலூர், N. A. Dt.
(மாநாட்டின் பொருளாளர்)

இடி-மின்னலுக்குக் காரணமென்ன?

[டர்பன். ச. மு. பிள்ளை]

நமது மக்கள் இடி, மின்னல் இவை உண்டாவதற்கு வேடிக்கையான காரணங்கள் கூறுவார்கள். இந்திரன் மேகங்களைச் சாட்டையால் அடிப்பதினால் மின்னலும், மேகங்கள் ஒன்றோடொன்று உராய்வதால் இடியும் உண்டாவதாகவும், இன்னும் சில அர்த்தமற்றக் காரணங்களும் கூறுவார்கள். ஆனால் விஞ்ஞானம் வேறு காரணங்களைக் கூறுகிறது.

அதாவது மின்சாரத்தினாலேயே இடியும், மின்னலும் உண்டாகின்றனவென்று பிராங்கின்-ஸ்டீன் கண்டுபிடித்தார், இடியும், மின்னலும் எவ்வாறு உண்டாகின்றனவென்றறிய அவர் வெகு நாட்களாக ஆவல் கொண்டிருந்தார். அக்கால விஞ்ஞானம் அவருக்குத் திருப்தியளிக்கவில்லை. ஆகையால் அவர் தாமாக ஆராய்ச்சி செய்ய ஆரம்பித்தார்.

மின்னல் மின்சாரத்தினால் உண்டாகிறதோவென்று அவருக்கு ஒரு நாள் சந்தேகந் தோன்றியது. அதைச் சோதிக்க அவர் ஒரு விநோதமான சோதனையைக் கையாண்டார்—அதாவது காற்றாடி விட்டார்.

அவர் பெரிய காற்றாடி ஒன்றைச் செய்தார். அதில் நரம்புகளுக்குப் பதிலாக உலோகக் கம்பிகளை அமைத்தார். நூலுக்குப் பதிலாக மெல்லிய உலோகக் கம்பியைக் கட்டினார். காற்றாடியைப் பறக்கவிட்டார்.

காற்றாடி மேலே போய்க் கொண்டிருந்தது. அவரும் கம்பியை விட்டுக்கொண்டிருந்தார். காற்றாடி மேக மண்டலத்தை அடைந்துவிட்டது. உடனே பிராங்கின்ஸ்டீன் காற்றாடிக் கம்பியின் மறு முனையை மின்சார அளவுக் கருவியுடன் இணைத்தார். அக்கருவி, காற்றாடிக் கம்பியில் மின்சாரம் பாய்வதைக் காட்டியது. அவருடைய சந்தோஷத்திற்கு ஓர் அளவேயில்லை. பிறகுதான் அவர் மனதிற்குச் சாந்தி ஏற்பட்டது; மேகத்தில் மின்சாரம் இருக்கிறது என்பதையும், அதன் விளைவாகத்தான் மின்னலும் இடியும் ஏற்படுகின்றனவென்பதையும் உலகறியச் செய்தார்.

"நெகடிவ்", "போஸடிவ்". என்று மின்சாரத்தில் இரண்டு வகையுண்டு. மேட்டினின்றும் தண்ணீர் பள்ளத்திற்குப் பாய்வது போல எப்பொழுதும் மின்சாரம் "போஸடி"வினின்றும் "நெகடி"விற்குப் பாயுந் தன்மையுடையது. சில மேகக் கூட்டங்களில் "போஸடிவ்" மின்சாரமும், வேறு சிலவற்றில் "நெகடிவ்" மின்சாரமும் இருக்கும். அவை ஒன்றினருகே மற்

றென்று வரும்பொழுது, ஒரு மேகப் படலத்தினின்றும் மற்றொரு மேகப்படலத்திற்கு மின்சாரம் பாய்கிறது. அப்பொழுது தான் கண்ணைப் பறிக்கும் ஒளியும், காதைச் செவிடு படச் செய்யும் ஒலியும் உண்டாகின்றன.

நம் வீடுகளில் மின்சார விளக்குகள் எரியும் பொழுதும் "போஸடி"வினின்றும் "நெகடி"விற்கு மின்சாரம் பாய்கிறது. அப்பொழுது அத்தகைய பேரொலியும் ஒளியும் ஏன் தோன்றுவதில்லை என்று கேட்கலாம். அதற்கு வேறு காரணமுண்டு. அங்கு உலோகக் கம்பிகளின் வழியே தான் மின்சாரம் ஓடுகிறது.

காற்று, தன் வழியே மின்சாரத்தைப் பாயவிடுவதில்லை. ஆனால், மின்சாரத்தின் சக்தி அளவு கடந்து போய் விட்டால், காற்றையும் எதிர்த்துக் கொண்டு "நெகடிவ்" மின்சாரம் இருக்கும் பொருளிற் பாய்ந்து விடுகிறது. காற்று மின்சார ஓட்டத்தைத் தடுக்க முயல்கிறது. அப்பொழுது காற்றுக்கும் மின்சாரத்திற்கும் இடையில் பெரும் "போர்" நிகழ்கிறது. இடியும் மின்னலும் உண்டாகும் பொழுது மேக மண்டலத்தில் இதுதான் நிகழ்கிறது.

"நெகடிவ்" மின்சாரம் உள்ள மேகமும் "போஸடிவ்" மின்சாரமுள்ள மேகமும் அருகே வருகின்றன. அப்பொழுது ஒன்றினின்றும் மற்றொன்றுக்கு மின்சாரம் பாய முயல்கிறது. இப்பாய்ச்சலை அவ்விரண்டு மேகங்களுக்கு மிடையில் உள்ள காற்று எதிர்க்கிறது. ஆனால் காற்றின் எதிர்ப்பு சக்தி அதிகமாக இருப்பதால், காற்றையும் எதிர்த்துக் கொண்டு காற்றின் வழியே மின்சாரம் பாய்கிறது. அப்பொழுது தான் ஒளியும் ஒலியும் உண்டாகின்றன.

இவ்வொளியை மின்னலென்றும், ஒலியை இடியென்றும் நாம் கூறுகிறோம். காற்றின் எதிர்ப்புச் சக்தி அதிகரிக்க அதிகரிக்க மின்னலின் ஒளியும் இடியின் ஒலியும் அதிகமாகின்றன. இரண்டு மேகங்களிலும் மின்சார நிலை சமமாகும் வரை, மின்சாரம் பாய்ந்தவுடன் மின்சாரம் ஓட்டம் நின்று விடுகிறது. இது ஒரு கணத்தில் நடைபெற்று விடுகிறது.

மழை காலத்தில் தான் மின்னலும் இடியும் அதிகமாக இருக்கின்றன. மற்றைக் காலங்களில் அவ்வளவு அதிகமாக இருப்பதில்லை. இருப்பினும் மழை பெய்யும் பொழுது தான் அவை ஏற்படும். இதற்குக் காரணம் காற்றிலுள்ள சிறு சிறு நீர்த் தவலைகளேயாகும். ஒரு மேகப் படலத்திற்கு, மின்சாரம் பாய்வதற்கு இவை மிகவும் உதவுகின்றன.

மின்னொளியும் இடியரவமும் ஒரே சமயத்தில் உண்டான போதிலும், மின்னொளியையே

நாம் முதலில் பார்க்கிறோம். சிறிது நேரம் கழித்துத்தான் இடியோசை நம் செவியில் படுகிறது. ஒளி—ஒலி ஆகியவற்றின் வேகமே இதற்குக் காரணமாகும்.

ஒளி ஒரு விநாடிக்கு 186,000 மைல் வேகத்தில் செல்லுகிறது. ஆனால், ஒலி சில ஆயிரக் கணக்கான அடிகள் தூரமே செல்கிறது. சில சமயங்களில் மின்னல் மாத்திரம் நம் கண்களில் படுகிறது. இடியோசையை நாம் கேட்பதேயில்லை. மின்னல் ஆகாயத்தில் வெகு தூரத்திற் உண்டாகுமாயின், ஒலி அலைகள் வெகு தூரம் வரவேண்டியிருப்பதால், தேய்வுற்று பூமியை யடையும் பொழுது நம் காது அறிய முடியாத அளவு மெலிந்து விடுகிறது. ஆகையால் தான் இடியோசையை நாம் கேட்பதில்லை. ★

வேதவேதாந்திகள், சித்த சிரோன்மணிகள், திரு அருள் பெற்றவர்கள் எம் நாட்டில் என்று பேசலாம்; பேசுகிறோம். ஆனால் எல்லாம் சரி உன் நாட்டின் கல்வி நிலையைக் கூறு என்று பிறர் கேட்டாலோ வெட்கித் தலை குனிகிறோம்.

—அறிஞர் அண்ணா

சோம்பிக் கிடப்பது தீமை. நல்ல தொண்டு செய்து கிடப்பவன் ஆமை. தேம்பி அழும்பிள்ளை போல் பிறந் தீமை கண்டு அஞ்சுபவன் கோழை.

—பாரதி தாஸன்

அடிபட்டவன் உன்னைத் திருப்பி அடிக்காவிட்டால் அவனிடம் எச்சரிகையாக இரு. ஏனெனில் அவன் உன்னை மன்னிப்பதுமில்லை. நீ அவனை மறப்பதுமில்லை.

—பெர்னாட்ஷா

எவன் தன்னைப்பற்றி அதிகமாகப் பேசுகிறானோ அவன் தன் குற்றங்களை மறைக்கப் பார்க்கிறான்.

—சாக்ரடீஸ்

எண்ணம் ஓர் மலர். மொழி அதன் மொட்டு. செயல் அதன் பழுத்த கனி.

—எச். டபிள்யூ. பிச்சர்

Edited, Printed and Published by P. Veeraraghavan
at the 'Venkatesan Press'
94/95 New St., Mannady, Madras.—1

வீரபாண்டியன் தமிழ் வாசகங்கள்

	புத்தகத்தின் விலை			கெஜட் பக்கம்	அங்கீகாரமான தேதி
முதல் வகுப்பு	0	4	0	25	19–5–'54
இரண்டாம் வகுப்பு	0	5	0	25	19–5–'54
மூன்றும் வகுப்பு	0	8	0	25	19–5–'54
நான்காம் வகுப்பு	0	9	0	25	19–5–'54
ஐந்தாம் வகுப்பு	0	10	0	25	19–5–'54

மாதிரிப் பிரதிக்கு ரூ. 1–2–0 அனுப்பவும்.

கதைப் புத்தகங்கள்

(S. S. அருணகிரிநாதர்)

பாலர் நல்ல கதைகள்					
நான்காம் வகுப்பு	0	5	0	28	19–5–'54
பாலர் கதா போதினி					
ஐந்தாம் வகுப்பு	0	5	0	59	19–5–'54

இந்த இரண்டு புத்தகங்கள் மாதிரிப் பிரதிகளாக வேண்டுவோர் ரூ. 0–5–0 அனுப்பவும்.

இயற்கைப் பாடமும் தோட்ட வேலையும்

(M. விவேகானந்தா, B. Sc. L. T.)

மூன்றும் வகுப்பு	0	5	0	...	...
நான்காம் வகுப்பு	0	7	0	18	19–5–'54
ஐந்தாம் வகுப்பு	0	8	0	18	19–5–'54

இந்த மூன்று புத்தகங்கள் வேண்டுவோர் ரூ. 0–10–0 அனுப்பவும்.

புதிய தேச ஆட்சி முறை

(D. சிவசங்கரராவ், B.A., L.T.)

மூன்றும் வகுப்பு	0	5	0	11	19–5–'54
நான்காம் வகுப்பு	0	7	0	8	19–5–'54
ஐந்தாம் வகுப்பு	0	8	0	8	19–5–'54

இந்த மூன்று புத்தகங்களை மாதிரிப் பிரதிகளாக வேண்டுவோர் ரூ. 0–10–0 அனுப்பவும்.

Regd No. M 5018.

புதுமுறை சங்கக் கணிதம்

K. வீராசாமி, B.A., B.T.

	புத்தகத்தின் விலை	கெஜட் பக்கம்	அங்கீகாரமான தேதி
மூன்றாம் வகுப்பு	0 8 0	14	19–5–'54
நான்காம் வகுப்பு	0 10 0	14	19–5–'54
ஐந்தாம் வகுப்பு	0 12 0	14	19–5–'54

மாதிரிப் பிரதிகள் வேண்டுவோர் ரூ. 0–15–0 அனுப்பவும்.

நம் நாட்டு வரலாறு

M. தக்ஷிணாமூர்த்தி, B. A, B. T.,
T. S. உமாபதி, M. A., L. T.

மூன்றாம் வகுப்பு	0 5 0	11	19–5–'54
நான்காம் வகுப்பு	0 7 0	8	19–5–'54
ஐந்தாம் வகுப்பு	0 9 0	10	19–5–'54

மாதிரிப் பிரதிகள் வேண்டுவோர் ரூ. 0–11–0 அனுப்பவும்.

தமிழ் இலக்கணம்

T. S. உமாபதி, M.A., L.T.

4, 5–வது வகுப்புகளுக்கு	0 5 0	8	4–5–'55

மாதிரிப் பிரதிகள் வேண்டுவோர் ரூ. 0–2–0 அனுப்பவும்.

சிறுவர் பூகோளம் (Tamil)

T. S. உமாபதி, M. A., L. T.

இரண்டாம் வகுப்பு	0 5 0	13	19–5–'54

V. K. சேஷாத்திரி, B. A., B. T.

மூன்றாம் வகுப்பு	0 7 0	12	19–5–'54
நான்காம் வகுப்பு	0 10 0	12	19–5–'55
ஐந்தாம் வகுப்பு	0 12 0	12	19–5–'54

மாதிரிப் பிரதிகள் வேண்டுவோர் ரூ. 1–1–0 அனுப்பவும்.

Mother India English Reader Primer - I 0—5—0

மாதிரிப் பிரதிகளுக்கு ரூ. 0–2–0 அனுப்பவும்.

Printed at the Venkatesan Press, Madras—1.